விலை ரூபா: 7.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 11 புதன்கிழமை (27.10.2004) தொலைபேசி - 2223378 ஒலி 313

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிறந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அரசியல் யாப்பை மாற்றமுடியாது

## ஜனாதிபதியின் முயற்சி வீண் என்கிறார் ஜீ. எஸ். பீரிஸ்

(நமது நிருபர்)

**சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தற்போதைய அரசியல் யாப்பினைத் திருத்துவதற்கு அரசாங்கம் முற்பட்டுவருகின்றது. ஆனால் அவ்வாறு செய்யமுடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தற்போதைய அரசியல் யாப்பை மாற்ற முடியாது. ஜனாதிபதியின் இந்த முயற்சி வெற்றியளிக்கப் போவதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு இப்பொழுதிருந்தே தயாராகி வருகின்றது, அதனடிப்படையில் அடுத்த ஆட்சிப் பொறுப்பு எமக்கே உரியதாகும்.

தற்போது ஆட்சியில் உள்ள கூட்டமைப்பு அரசாங்கத்தைக் கவிழ்த்து அதன் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றி இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதே எமது பிரதான நோக்கமாகும்.

அரசாங்கத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை சபாநாயகர் லொக்கு பண்டாரவை பதவியில் இருந்து நீக்குவதாகவே காணப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் பிரஜையின் கொலைக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் சுவிஸ் நாட்டுப் பிரஜை கொல்லப்பட்ட சம்பவத்திற்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல்துறை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இன்று சர்வதேச மயப் படுத்தப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகள் உலக நாடுகளுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. யுத்தம் நிறுத்தப் பட்டு, சமாதான சூழ்நிலை நிலவும் இக்காலப் பகுதியில் அடிக்கடி இடம்பெறும் இவ்வாறான சம்பவங்கள் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய ஆலோசனை சபை நவ. 1 ல் மீண்டும் கூடுகிறது

(கொழும்பு)

சமாதானம் மற்றும் மறுசீரமைப்புக்கான தேசிய ஆலோசனை சபையின் அரசியல் அமைப்பு கூட்டம் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இருவரை அனுப்பிவைக்குமாறு அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆலோசனை சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அனைத்துக் கட்சிகளையும் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் உட்பட சில கட்சிகள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய ஆலோசனை சபையின் சர்வமதப் பிரதிநிதிகளுக்கான கூட்டம் எதிர்வரும் 2ம் திகதியும், சிவில் சமூகத்தினருக்கான கூட்டம் 4ஆம் திகதியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-121-8)

## லொறி - ஹயஸ் - மோட்டார் சைக்கிள் நாவற்குழியில் விபத்து; 14 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி சந்திக்கு அருகில் இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட 14 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து இறால் ஏற்றிச் சென்ற குளிரூட்டப்பட்ட லொறியும், கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றிவந்த ஹயஸ் வானுமே நேருக்குநேர் மோதியுள்ளன.

இதன்போது இரு வாகனங்களிலும் பயணம் செய்த 14 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களின் விபரம் வருமாறு,

வாகனச் சாரதிகளான வவுனி யாவைச் சேர்ந்த மன்சூர் ஆப்தீன் (வயது 37), ஹயஸ் சாரதி இராசா தங்கராசா (வயது 50) சிலாபம், கந்தையா சசிதரன் (வயது 30) கல்வியங்காடு, ஒரே குடும்பத்தைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வல்லைப் பாலம் உடைந்து போக்குவரத்து தடைப்பட்டது

(கரவெட்டி)

வல்லைப் பாலம் உடைந்ததால் அதனூடான போக்குவரத்து நேற்று சில மணிநேரம் தடைப்பட்டது.

கடும் மழை பெய்துகொண்டிருந்தபோது மணல் ஏற்றிவந்த லொறி ஒன்றின் சில்லு பாலத்தில் காணப்பட்ட துவாரத்தினுள் புகுந்து கொண்டது. இதனால் லொறியை அங்கிருந்து அகற்றும்வரை போக்குவரத்துக்கள் தடைப்பட்டன.

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகள் போக்குவரத்து சேவையை மேற்கொண்ட வாகனங்களும்

(12 ஆம் பக்கம் பார்க்க)



படம்: பவன்

## காயமடைந்த சுவிஸ்லாந்து பிரஜை நேற்று மரணமானார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த சுவிஸ்லாந்து பிரஜை நேற்று அதிகாலை மரணமானார்.

ஹான்ஸ் ஹெரோஸ் (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். கைக்குண்டு தாக்குதலில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## க.கா. குழுவின் முடிவை சாடுகிறார் சிறில் ஹேரத்

(கொழும்பு)

திருகோணமலை துறைமுகத்தை அண்டிய பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் பற்றிய சர்ச்சையில் பாதுகாப்பமைச்சும் கண்காணிப்புக் குழுவும் முரண்பட்டுள்ளன. இது தொடர்பில் பாதுகாப்புச் செயலர் சிறில் ஹேரத் தெரிவிக்கையில்,

திருகோணமலை துறைமுகத்தைச் சூழ விடுதலைப் புலிகளின் முகாம்கள் இருப்பது பற்றி எமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது தொடர்பாக கிடைத்த புலனாய்வுத் தகவல்களின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினையில் நேரடியாக தலையிட இந்தியா மறுப்பது ஏன்?

### விளக்குகிறார் இந்துப் பத்திரிகை ஆசிரியர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடைவிதித்துள்ளதாலேயே இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் நேரடியாகத் தலையிடுவதற்கு இந்தியா தயங்குகின்றது என இந்துப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என். ராம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காமினி திஸநாயக்கவின் 10 ஆவது நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், 2001 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு இந்தியா உதவிவருகின்றது. ஆனால் நேரடியாக உதவிசெய்து சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளமுடியாத நிலையில் இந்தியா இருக்கின்றது. எனினும் இதைப் பற்றி இந்தியா பெரிதும் கவலைப்படவில்லை.

ஜப்பான், நோர்வே, அமெரிக்க ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகள் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்க முன்வந்திருப்பதை இந்தியா வரவேற்கின்றது.

இந்தியா 2003 ஆம் ஆண்டு வெளியிட்ட கொ... கைகளை முன்னெடுத்துச் செல்வதில் மன்மே...

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஐ.நாவின் கிளை நிறுவனங்கள் யாழில் திறம்படச் செயலாற்றுகின்றன

## ஐ.நா.தினநிகழ்வில் அரச அதிபர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்ற பிற்பாடு இவ் யுத்தத்தினால பாதிக்கபபட்ட மக்களுக்கு உதவி செய்து உலகில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உருவாக்கப்பட்டது.

இவ் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உருவாக்கப்பட்டு 59வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளபோதும் உலகில் சமாதானம் இன்னும் உருவாகவில்லை.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன். நேற்று முன்தினம் யாழ்.பொது நூலகத்தில் இடம்பெற்ற ஐ.நா.தினநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உருவாக்கப்பட்ட ஆரம்பத்தில் இலங்கையில் ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் செயற்பட்டு வந்தது.

பின்பு 1983ஆம் ஆண்டு நாட்டில் யுததம் ஏற்பட்ட பிற்பாடு, இவ் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்து அவர்களது அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் இலங்கையின் ஐக்கியநாடுகளின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

இதற்கமைய ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்ந்தவர்களுக்காக சர்வதேச நிறுவனம், உலக சுகாதார நிறுவனம், ஐக்கியநாடுகளின் உலக விவசாய நிறுவன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தாபனம், ஐக்கிய நாடுகளின் உலக அபிவிருத்திநிறுவனம் மற்றும் மிதிவெடி அகற்றும் நிறுவனம் போன்றன இலங்கையில் திறம்படச் செயற்பட்டு வருகின்றன.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில பல்வேறு முன்னேற்றகரமான செயற்திட்டங்களை இந்நிறுவனங்கள செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது எனத் தெரிவித்தார்.

(ந-19)

# குடாநாட்டு கடற்றொழிலாளருக்கு ஜப்பான் பயிற்சி வழங்கவுள்ளது

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டுக் கடற்றொழிலாளர்களுக்குக் கடற்றொழில் சார் நுட்பங்கள் அடங்கிய பயிற்சிகளை வழஙக ஜப்பான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குடாநாட்டில் கணிசமான அளவு கடற்றொழிலாளர்கள் வாழ்கின்ற போதும் அரசாங்கம் அவர்களின் தொழிற்துறை சார் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான உதவிகளையோ, பயிற்சிகளையோ வழங்குவதில்லை.

இதனால், பின்தங்கிய நிலையிலுள்ள குடாநாட்டுக்கடற்றொழிலாளாகளுக்குத் தொழில்சார் அபிவிருத்திகளை மேம்படுத்தும் நோக்கில் ஜப்பான் அரசு இத்தகைய பயிற்சியை வழங்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் அடிப்படையில் யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் 10பேர் விரைவில் ஜப்பானுக்கு அழைத்துச்செல்லப்படவிருக்கின்றனர்.

இவ்வாறு ஜபபான் அரசின் அனுசரணையுடன்ஜப்பானுக்கு அழைத்துச் செலலப்படவுள்ள கடற்றொழிலாளர் குழு, அந்நாட்டின் கடற்றொழில் துறைசார் தொழில்நுட்ப முறைகளில் பயிற்சிபெற்று மீண்டும் நாடு திரும்பும்.

நாடு திரும்பியதும் அக்குழுவினர் தாம் அறிந்துவந்த ஜப்பானியக் கடற்றொழில்நுட்பங்களை குடாநாட்டில் அறிமுகம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-43)

# இலங்கையை அழிப்பதே அமெரிக்காவின் நோக்கம்

## அனுரா ஆதங்கம்

(கொழும்பு)

இலங்கை போன்ற சிறிய நாடுகளை அழிப்பதனை நோக்காகக் கொண்டுள்ளதே அமெரிக்காவின கொள்கை என அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா ஈராக மீது தொடுத்த போரை எதிர்க்கிறேன். அவர்கள் தறபோது ஈரானை தாக்குதவற்குத் திட்டமிடுகிறாாகள். ஈராக்கின் எண்ணெய் உற்பத்தி முடக்கப்பட்டுள்ளது. ஈரானும் இதே அச்சுறுத்தலை தற்போது எதிர்நோக்குகிறது. அமெரிக்காவின் நடவடிக்கைகளால் எம் போன்ற வறிய நாட்டு மக்களே வேதனைப்படுகிறார்கள். இதுகுறித்து ஐரோப்பிய நாடுகளுடனான சந்திப்பினபோது வலியுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

(ச-6)

# அடிப்படை வசதிகளற்ற கோகிலாமலை கிராமத்தை உடன் அபிவிருத்தி செய்யுங்கள்

(திருநெல்வேலி)

அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத நிலையில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள கோகிலாமலைக் கிராமத்தில் உடனடியாக அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்வதற்கு துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தென்மராட்சி பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

106 குடும்பங்களைக் கொண்ட இக் கிராமத்தில் 80சதவீத மக்கள் விவசாயம் மேற்கொள்பவர்களாவர்.

இவர்களுடைய விளைநிலங்களில் 16ஹெக்ரேயர் நிலப்பரப்பில் இராணுவம் முகாம் அமைத்திருக்கின்றது.

இதனால் இப்பகுதி மக்கள் அரச நிவாரணத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராமம் கடந்தகால யுத்தத்தினால் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. வீடுகள், சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள் மயானம், என்பன முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள குளங்கள் அனைத்தும் தூர்ந்துபோயுள்ளன. இதனால் இந்தக் கிராமத்தை உடனடியாக புனரமைக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீனிவாசனைக் கேட்டுள்ளனர்.(க-43)

# இராமேஸ்வர மீனவர்கள் இலங்கை வருவதற்கு முஸ்தீபு

## 200ற்கும் மேற்பட்ட படகுகள் தயார் நிலையில்

(இராமேஸ்வரம்)

இலங்கை கடற்படையினரின் தாக்குதல்களை தடுக்கக்கோரி 20 நாட்களுக்கும் மேலாக இராமேஸ்வர மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

தற்போது இவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கையாகத் தமது கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படாவிட்டால் தத்தமது குடும்பத்துடன் இலங்கைக்குச் செல்வது எனவும் முடிவு செய்துள்ளனர்.

இதற்காக சுமார் 200ற்கு மேற்பட்ட படகுகளில் வெள்ளைக் கொடி கட்டும் பணிகள் நேற்றைய தினம் மேற்கொளளப்பட்டு படகுகள் தயார் நிலையில வைக்கப்பட்டதை அடுத்து இரமேஸ்வரம் பகுதியில் பெரும் பர பரப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதி தொடங்கிய இராமேஸ்வரம் மீனவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம், 20 நாட்களைத் தாண்டிய போதும் தமது தொழிலுக்குச் செல்லாது இராமேஸ்வர மீனவர்கள் தொடர்ந்தும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

மீனவர்களின் இப் போராட்டத்தினால் சென்னை முதல் இராமேஸ்வரம் வரை மீனபிடித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(ந)

# யசூசி அகாஸி இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஸி உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்று கொழும்பு வரவுள்ளார்.

ஏழு நாட்கள் வரையில் தங்கியிருக்கும் அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உட்பட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

2002ஆம் ஆண்டு இலங்கைக்கான விசேட தூதுவராகப் பதவி ஏற்ற யசூசி அகாஸி எட்டாவது தடவையாக இவ் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டுவரும் யசூசி அகாஸி தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக இலங்கை அரசிடமும் விடுதலைப்புலிகளிடமும் வேண்டுகோள் விடுப்பார் என்று ஜப்பானிய தூதுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறு இருக்க யசூசி அகாஸி இலங்கையில் தங்கியுள்ள காலத்தில் வன்னிக்குச்சென்று விடுதலைப்புலிகளின் உயர்மட்ட தலைவர்களையும் சந்தித்துப் பேசுவார் என்று ஜப்பானிய தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

(ம)

# ஐ.தே.க. எம்.பிக்கு பிடிவிறாந்து

(கொழும்பு)

குருநாகல் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.ஜோன்சன் பெர்ணான்டோவைக் கைதுசெய்வதற்கு குருநாகல் மாவட்ட நீதிபதி சுமுக பிரேமச்சந்திரா பிடிவிறாந்து பிறப்பித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலின் போது வேட்பாளரான பிரதி அமைச்சர் ஜெயரத்தின ஹேரத்தின் வீட்டுக்கும், மற்றுமொருவரின் வீட்டுக்கும் சேதம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்ட நீதிபதியின் உத்தரவை அடுத்து குருநாகல் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜோன்சன் பெர்ணான்டோவைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

(ம)

# போதிய தகைமைகள் இருந்தும் அனுமதி மறுக்கப்பட்ட 24 மாணவர்களை மருத்துவத்துறையில் சேர்க்குமாறு உத்தரவு

(கொழும்பு)

மருத்துவத் துறைக்குப் போதிய தகைமைகளைப் பூர்த்திசெய்த 24 மாணவர்களை அத்துறைக்கு அனுமதிக்க மறுத்ததன் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அடிப்படை உரிமைகளை மீறியிருப்பதாக உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.


பாதிககபபட்ட ஒவ்வொரு மாணவருக்கும் முப்பதாயிரம் ரூபாவினை நஷ்டஈடாக வழங்க வேண்டும் என உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் அடங்கிய குழு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த 2001ஆம், 2002ஆம் கல்வியாண்டில் மருத்துவததுறைக்கு அனுமதித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்த மாணவ, மாணவிகள் தாககல் செய்த மனுவை விசாரித்த பின்னரே நீதிமன்றம் இவ் உத்தரவினைப் பிறப்பித்துள்ளது.

இவர்கள் தொடர்பான விடயத்தில் பல்கலைக்கழக மானியங்கள ஆணைக்குழு தன்னிச்சையாக நடந்துகொண்டதாகத் தெரிவித்துள்ள உயர் நீதிமன்றம் பாதிக்கபபட்ட மாணவர்களை உடனடியாக 2005 ஆம கல்வியாண்டிற்காகச் சேர்த்துக் கொள்ளுமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

(ந-121)







உலக இளைஞர் சதுரங்கச் சம்பியன் போட்டிக்காக கிரீஸ் செல்லவுள்ள வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி சிவகுருநாதன் வித்தியராணிக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் தமிழீழ மாணவர் பேரவையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் க.பொன்னம்பலம் ஆசியுரை வழங்குவதையும், யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி பரிசில் வழங்குவதையும், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் 25ஆயிரம் ரூபா பணத் தொகையை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சிவசங்கர்)

# அமெரிக்காவில் விமான விபத்து 10பேர் உடல்கருகி பலியாயினர்

அமெரிக்காவில் நாஸ்கார் ஹென்றிக் மோட்டர் ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தினருக்குச் சொந்தமான விமானம் ஒன்று நேற்று முன் தினம விபத்துக்குள்ளானதில் 10பேர் பரி தாபமாக உடல் சிதறி இறந்தனர்.

வெர்ஜினியா தெற்குப் பகுதியில் அமைந்துள்ள மார்ட்டின் வில்லிசிறிய விமான நிலையததில் இருந்து, நாஸ்கார் ஹென்றிக் மோட்டார் ஸ்போர்ட்ஸ் அமைப்புக்குச் சொந்தமான விமானம் பிற்பகல் கிளம் பியது. விமான நிலையத்தில் இருந்து ஏழு கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மலைப் பகுதியில் சென்று கொண்டிருந்த விமானம் மலையில் மோதி வெடித்தது.

இந்த விபத்தில விமானத்தில் சென்ற 10பேர் பலியாயினர். அவர்களில் விமான உரிமையாளர் ரிக் ஹென்ரிக்கின் மகன் ரிக்கி சகோதரர் ஜான் மற்றும் உறவினா கள் இருவர் அடங்குவார்கள்.

அடர்ந்த பனி நிலவியதால் விபதது ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. நாஸ்காா சார்பில் நடக்கவிருந்த கார் பந்தயத்தைக காணச் சென்றுகொண்டிருந்தபோது விமா னம் விபத்தில் சிக்கியதாகக் கூறப்படு கிறது.

இவ்விமான விபத்தில் உடல் சிதறிப் பலியானோரின் சடலங்களை மீட்கும் பணி களில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

எனினும் சம்பவம் இடம்பெற்ற பகுதி யில் கடும் பனி பெய்துவருவதால் மீட்புப் பணிகள் தாமதமடைவதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ப)

## தாய்வானில் புயல்

(தைபே)

தாய்வானில் கடும் புயல் வீசி வரு வதால் கல்வி நிலையங்களும், வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளன.

அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடு களைத் தாக்கிய புயல் தொடர்ந்து தாயவா னையும் தாக்கி வருகிறது.

பசிபிக் பெருங்கடலில் உருவான சூறா வளி புயல் தாய்வானின் கிழக்குப் பகுதி யைப பலமாகத் தாக்கி வருகிறது.

இதனால் இப்பகுதியில் ஏராளமான வீடுகளும், பயிர்களும் சேதமடைந்துள் ளன. மின்கம்பங்கள் வீழ்ந்துள்ளதால், மின இணைபபு துண்டிக்கப்பட்டுள்ளது. புயலைத தொடர்ந்து பெரும்பாலான இடங்களில் பல த்த மழை பெய்து வருகிறது. ...னால் இங் குள்ள முக்கியமான ஆறுக... வெள்ளம பெருக்கெடுத்து ஓடுகிறது.

புயல் மற்றும் வெள்ளத்தின் காரண மாக தலைநகர் தைபேயில் கல்வி நிலை யங்களுக்கும், வர்த்தக நிறுவனங்களுக் கும விடுமுறை அறிவிக்கபபடடுள்ளது. (ப)

## இஸ்லாம் பாதுகாப்பு முன்னணியினர்

# இந்தோனேஷிய விடுதிகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு திட்டம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் செயல்படும் இரவு கேளிக்கை விடுதிகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்த இஸ்லாமிய பாதுகாப்பு முன்னணியினர் திட்டமிட்டுள்ளனர்.

ரம்ழான் மாத நோன்பு காலத்தில் அரசின் சட்ட திட்டங்களை மீறி இந்தோ னேஷியாவில இரவு கேளிக்கை விடுதி கள் செயல்படுவதாகக் குற்றச்சாட்டு எழுந துள்ளது.

கடந்தவாரம் 'கிளப்' ஒனறில் இஸ் லாமியர்கள் பலர் நுழைந்து தாக்குதல் நடத்தினர். இந்நிலையில், இரவு கேளிக்கை விடுதிகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத் தப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட டுள்ளது. இதுகுறித்து இஸ்லாமியப் பாது காப்பு முன்னணியைச் சேர்ந்த அல்லாவி உஸ்மான் என்பவர் கூறுகையில்,

இஸ்லாமியர்களின் புனித ரம்ழான் காலத்தில் சட்டவிரோத நடவடிக்கைகள் நடக்கின்றன. அதை உடனடியாக நிறுத்த வேண்டும். ரம்ழான் காலம் முடியும் வரை, இரவு கேளிக்கை விடுதிகளில் மது விநி யோகம் செய்வதை நிறுத்தவேண்டும். அரசு சட்ட திட்டங்களை மீறி இரவு கேளிக்கை விடுதிகள் செயல்படுவதை அதிகாரிகள் கண்டும் காணாமல் இருக்கின்றனர். அத னால் நாங்களே நேரடியாகத் தலையிட்டு வருகிறோம் என்றார்.

இந்தோனேஷிய கேளிக்கை விடுதி களுக்கு வெளிநாட்டினர் பலர் வந்து செல் கின்றனர். தற்போது இஸ்லாமியர்களின் தாக்குதலை அடுத்து இரவு கேளிக்கை விடுதிகளுக்குச் செல்ல வெளிநாட்டினர் தயக்கம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில், ஜகார்த்தாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம், அமெரிக்கர்களை எச்சரித்துள்ளது. இந்தோனேஷியாவில் செயல்படும் கேளிக்கை விடுதிகளுக்குச் செல்லும் அமெரிக்கர்கள் எச்சரிக்கையு டன் நடந்துகொள்ளவேண்டும. பாதுகாப்பை உறுதிப்படுததிக்கொள்ளுஙகள என்று தூத ரக அதிகாரிகள் கூறியுள்ளனர். (ப)

WORLD NEWS
உலக தரிசனம்



பிரதமர் மன்மோகன் சிங்கும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் மைசூரில் நடைபெற்ற தசரா விழாவில் கலந்து கொண்ட காட்சி.

# ஈராக்கில் கார்குண்டு வெடிப்புகள் 8பேர் பலி 14பேர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இரா ணுவச் சாவடி அருகே கார் குண்டு ஒன்று வெடித்ததில 4 ஈராககியர்கள் கொலலப் பட்டனர். 8பேர் காயமடைந்தனர்.

மத்திய பாக்தாத்தில் குடியிருப்புப் பகுதியில் திங்கட்கிழமை காலையில் இச சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் வெளிநாட்டு இரா ணுவ வாகனம் சேதமடைந்தது.

பாதுகாப்பு நிறைந்த அமெரிக்கத் தூதரகம் அமைந்துள்ள பசுமை மண்ட லப் பகுதிக்குச் செல்லும் வழியில் ஒரு பள்ளி மற்றும் பாலம் அருகே மற்றுமொரு கார் குண்டு வெடித்தது. இதில் 4 பேர் பலி யானதுடன் 6பேர் காயமடைந்தனர்.

இவ்வாறான தாக்குதல் சம்பவங்க ளால் தாக்குதல் நடைபெற்ற இடங்களில் ஏராளமான கட்டடங்கள இடிந்துவீழ்ந்திருப பதாகவும் பல வர்த்தக நிலையங்கள தீப் பிடித்து எரிவதாகவும் அங்கிருந்து கிடை க்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல்களுக்கு இதுவரையில் யாரும் உரிமைகோராத போதும் இத் தாக்குதலை ஷியாமுஸ்லிம் தீவிரவாதி களே நடத்தியிருப்பதாக சந்தேகிக்கப் படுகிறது.

இதனையடுத்து ஷியாமுஸ்லிம் தீவிரவாதிகளினைத்தேடி அழித்தொழிக் கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வுள்ளதாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஷியா முஸ்லிம் தீவிர வாதிகள் பதுங்கியிருக்கும் பலுஜா நகர் பகுதிகளில் அமெரிக்கப்படைகளை மேலதி கமாகக குவிக்கத் தாம் திட்டமிட்டிருப்ப தாக அமெரிக்க, பிரிட்டன் கூட்டுப்படைத் தளபதி ஒருவர் தெரிவித்தார்.

எது எவ்வாறு இருப்பினும், அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறவிருக்கும ஈராக்கின் ஜனநாயக தேர்தல் காலததில் பல்வேறு கிளர்ச்சி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத தாம் திட்டமிட்டிருப்பதாகத் தீவிரவாதிகள் தரப்புச் செய்திகள் தெரி விக்கின்றன. (ப-61)



பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள மணிலா நகரில் உலக அழகிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் பிரேல் நாட்டு அழகி பிரிசில்லா மெரிலஸ் மிஸ் எர்த் 2004ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார். (இடமிருந்து 2ஆவதாக உள்ளார்). 21 வயதான இவர் மருத்துவ கல்லூரி மாணவி ஆவார். இவருக்குப் பட்டம் வழங்கி வைரக் கிரீடம் அணிவித்தனர். அவருடன் படத்தில் பராகுவே நாட்டு அழகி பயர்யூானினா, மார்டினிகியூ நாட்டு அழகி ஏர்மரியல் செலிமின், தகிதி நாட்டு அழகி கஹையா லெசெஜ் ஆகியோர் உள்ளனர்.



சீனாவில் உள்ள சூகாய் நகரில் நேற்று முன்தினம் 2004 ஆம் ஆண்டின் அழகிய உலக மொடல் தேர்வுக்கான போட்டி நடை பெற்றது. இதில் டூபீஸ் உடை யில் அழகிகள் மேடையில் தோன்றினர். ஆனால் மேடைக்கு வரும்போது அழகை துணித்திரையால் மூடிக்கொண்டு வந்ததைப் படத்தில் காணலாம்.

# மீள் பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

அத்தியாயம்-1 தொடர்

மு. திருச்செல்வம்

இந்தக் கூட்டம் கொழும்பு அரசாங்க எழுதுவினைஞர் சேவைச் சங்கத்தின் மண்டபத்தில் நடைபெற்றது. அவர் உரையின் குறிப்பிடத்தக்க சில வரிகளைத் தருகிறேன். "..... 9ஆம் 10ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் வடக்கில் உள்ள தமிழரின் நிலப்பகுதிகளில் தமிழர் ஆட்சி தொடங்கியது. தெற்கே உள்ள சிங்கள நிலப்பகுதிகள் தனியாக ஆட்சி செய்யப்பட்டன. சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகள் தென்னிலங்கையில் இருந்தன. காலம் மாறினாலும் சிங்கள அரசும் தமிழ் அரசும் தனித்தனியாக நெடுங்காலம் தொடர்ந்தன ஐரோப்பியர்கள் வந்து முதலில் தமிழ் அரசைக் குலைத்தார்கள். பின்னர் சிங்கள அரசைக் குலைத்தார்கள்.

"..... பல நூற்றாண்டுகளாக இருந்த இரு நாடுகள் பிரிட்டிஷாரினால் இணைக்கப்பட்டன. நிர்வாகத்தேவைக்காக மட்டும் இணைக்கப்பட்டன. இந்த இரு நாடுகளும் இயற்கையாக ஒன்றிணையவில்லை..."

## நிலங்கள் கற்பழிப்பு

முதறிஞர் செல்வநாயகத்தின் வாக்கு பொய்யாகவில்லை. தமிழரின் வாழ்விடங்களிலும், நிலப்பகுதிகளிலும் சிங்கள மக்களை வலிந்து குடியேற்றியது. இலங்கை அரசு வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் இந்தக்குடியேற்றம் நடைபெற்றது.

ஆட்சிப்பொறுப்பு சிங்களவர்களின் கைகளில் இருந்தது. குடியேற்றத்திற்கு எதிராக அரசியல் அமைப்பில் தமிழர்க்குப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. தமிழர்களின் நிலங்கள் கன்னி நிலங்கள் குடியேற்றத்தினால் இந் நிலங்கள் கற்பழிக்கப்பட்டன. இதற்கு ஆட்சி உடந்தையாக இருந்தது.

## சிங்களமே ஆட்சி மொழி

பாராளுமன்றம் அமைக்கப்பட முன் அரசாங்க சபை என்ற அமைப்பு இருந்தது. 1944ல், ஆங்கிலத்தின் இடத்தில் சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாக அமரவேண்டும் என அரசாங்கச் சபையில் ஜூனியஸ் றிச்சட் ஜெயவர்த்தனா முன்மொழிந்தார். சிங்களமும் தமிழும் ஆட்சி மொழிகளாக இருக்கவேண்டும் என இத்தீர்மானம் திருத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

1948இல் ஆட்சிப்பொறுப்பு இலங்கை அரசிடம் வழங்கப்பட்டபொழுது ஆட்சி மொழிபற்றிக் குறிப்பிடப்படவில்லை. ஆங்கிலமே ஆட்சி மொழியாக தொடர்ந்தது. 1951 இல் ஆட்சியில் அமர்ந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சராக இருந்த சொலமன் வெஸ்ட் றிட்ஜ் வேடியஸ் பண்டாரநாயக்கா அக் கட்சியில் இருந்து விலகினார். சிங்களத்தையும் தமிழையும் ஆட்சி மொழிகளாக்காமல் காலத்தைக் கடத்துகிறது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி என குற்றம் சாட்டினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தொடக்கினார். சிங்களமும் தமிழும் ஆட்சி மொழிகளாக்கப்படும் எனக் கொள்கை வகுத்தார்.

1954இல் இலங்கைப் பிரதமராக இருந்த சர்ஜோன் கொத்தலாவலை யாழ்ப்பாணத்திற்கு வந்தார். கொக்குவில் இந்துக்கல்லூரியில் அளித்த வரவேற்பில் உரையாற்றினார். சிங்களத்திற்கும் தமிழுக்கும் சம உரிமை வழங்கி ஆட்சிமொழிகளாக்கப்படும் என தமிழர்களுக்கு உறுதியளித்தார். 1955இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக்கவேண்டும் எனக் கொள்கை வகுத்தது. 1956 முற்பகுதியில் களனி மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியும் சிங்களத்தை மட்டும் ஆட்சிமொழியாக்கவேண்டும் எனத் தீர்மானித்தது.

1956ஆம் ஆண்டு தேர்தலில் தமிரசுக்கட்சி அமோகமாக வெற்றி பெற்றிருந்தது. போட்டியிட்ட 14 தேர்தல்தொகுதிகளில் 10 தொகுதிகளில் வெற்றியீட்டியது. முதறிஞர் செல்வநாயகத்தின் கூட்டாட்சி அரசுக்கொள்கையை தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக ஏற்றுக்கொண்டனர்.

1956இல் எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க பிரதமர் ஆனார். தமிழரின் கடுமையான எதிர்ப்பையும் பொருட்படுத்தாது 1956 யூன் 5 ஆம் நாள் "சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாகும்" என்ற சட்ட மூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இந்நாள் அன்று தமிழ்த் தலைவர்களும் தமிழ் மக்களும் காலிமுகத்திடலில் அறப்போர் நடத்தினர். உண்ணா விரதம் இருந்தனர். சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டனர்.

சிங்கள மொழி மட்டுமே ஆட்சி மொழியாகும் என்ற தீர்மானம் பற்றிய சனப்பிரதிநிதிகள் சபை விவாதத்தில் முதறிஞர் செல்வநாயகம் கலந்து கொண்டார். அவரின் உரையின் உள்ளடக்கம் பின்வரும் வரிகளில் தெளிந்துள்ளது.

"... தமிழர்கள் இந்நாட்டவர்களாக இருக்கவேண்டும். நாம் அழிக்கப்படுவதை எதிர்க்க - உருக்குலைக்கப்படுவதை எதிர்க்க உறுதி வேண்டும். வலிமை வேண்டும். எமது அமைப்பு வலிவுடையதாகவேண்டும். உள்ளம் வலிவுடையதாக வேண்டும். சோல்பரி அரசியல் அமைப்பின் கீழாட்சி செய்யும் எந்தச் சிங்கள அரசிடமிருந்தும் சிங்கள அரசின் பிடிகளிலிருந்தும் விடுபட தமிழ் பேசும் மக்களுக்கு வலிமைகள் அவசியம் என நாம் உணர்ந்துள்ளோம். அத்தகைய போராட்டத்தில் இலங்கை தமிழர் போன்ற அளவுள்ள சமூகம் இலங்கைக்கு உள்ளும் வெளியேயும் தமது துன்பங்களை எடுத்துக்கூற வேண்டும். ஏனைய நாடுகளின் ஆதரவு பெறும் நோக்குடன் இவற்றை எடுத்துக்கூற வேண்டும்..."

1956 யூன் 14நாள் சனப்பிரதிநிதிகள் சபையில் இச்சட்ட மூலம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட பொழுது தமிழ் உறுப்பினர் அனைவரும் கட்சி வேறுபாடின்றி எதிர்த்து வாக்களித்தனர். இரு முஸ்லிம் உறுப்பினர்களைத் தவிர ஏனைய முஸ்லிம் உறுப்பினர்களும் எதிர்த்து வாக்களித் தனர்.

## இனக் கலவரம்

சிங்கள மொழிச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்பு தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கு மிடையே கடுமையான கசப்புணர்வு ஏற்படத்தொடங்கியது. தமிழர்களின் உரிமைகள் முழுமையாகப் பறிக்கப்பட்டுவிட்டதை தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு எடுத்துரைத்தனர். சிங்களமயமாக்கத்திற்கு தமிழர்கள் எதிராக உள்ளதைச் சிங்களத் தீவிரவாதிகளும் பௌத்த பிக்குகளும் சிங்கள மக்களுக்கு எடுத்துக்கூறினர்.

சிங்கள-தமிழ் உறவுகள் மோசமடைவதற்கு முன்பு தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த பண்டாரநாயக்க விரும்பினார். தமிழரசுக்கட்சியினரை அழைத்தார். பேச்சுவார்த் தைகள் நடைபெற்றன. பண்டாரநாயக்க- செல்வநாயகம் ஒப்பந்தம் எழுந்தது. இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து ஐக்கியதேசியக் கட்சி கண்டியாத்திரையை மேற்கொண்டது. பௌத்த பிக்குகள் எதிர்ப்புத்தெரிவித்தனர். ஒப்பந்தம் கைவிடப்பட்டதாக பண்டாரநாயக்க அறிவித்தார். இந்த ஒப்பந்தம் மூலம் தமிழர் நிலப்பகுதிகளான வடக்கு-கிழக்கு மாகாணங்களை தமிழர்களே ஆட்சி செய்யும் மாநில அவைகளுக்கு இடமளிக்கப்பட்டது-தமிழ், ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. சிங்கள குடியேற்றம் தடுத்து நிறுத்த வகை செய்யப்பட்டது. ஒப்பந்தம் கைவிடப் பட்டதால் சிங்கள-தமிழ் உறவுகள் மேலும் மோசமடைந்தன.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## விபத்து

(பொலிகண்டி)

முகமாலையில் இருந்து பயணிகளை ஏற்றி வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைப் பேருந்து மின் கம்பம் ஒன்றுடன் மோதி விபத்துக் குள்ளாகி முறிந்து விழுந்தது. இவ் விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. (ப-106)

## சட்டவிரோத மின்சாரம்

(கோப்பாய்)

கோப்பாயிலுள்ள தேசியக் கல்வியியல் கல்லூரியை அண்டிய பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம பெறுவோர் தொகை அதிகரித்து வருவதாகத் தெரியவருகின்றது.

இதனால் சட்டத்திற்கமைவாக நிரந்தர மின்சாரம் பெறுவோர் பல வித சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (ப-79)

## வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் கடந்த 22ஆம் திகதி வாணி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. (க)

## கருத்தரங்கு

(ஊர்காவற்றுறை)

"யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வோதயம் நடாத்தும் கிராம மட்ட தொண்டர்களுக்கான கண்ணிவெடி அபாயக்கல்விப் பயிறசிப்பட்டறை ஒன்று நேற்று முன்தினம் மாலை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றுள்ளது. (ப-75)

## கோரிக்கை

(இணுவில்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் இருந்து தாவடிக்குச் செல்லும் வாகையடி வைரவர் வீதியினை புனரமைப்புச் செய்யுமாறு அப்பகுதி மககள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்டகாலமாக இவ்வீதி திருத்தப்படாமல் இருப்பதனால் அப்பகுதி மக்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமையை சுட்டிக்காட்டியே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப-122)

## போயா ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று புதன் கிழமை அதிகாலை 5.00 மணிக்கு போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல நாராயண சேவையுடன் நிறைவு பெறும். (ற)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் பிரதி செவ்வாய்கிழமைகளில் காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் மண்டபத்திலும், பிரதி வியாழக்கிழமைகளில் காலை புளியங்கூடல் கிராம அலுவலர் அலுவலகத்திலும், பிரதி வியாழக்கிழமை பிற்பகல் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை பாலர் பாடசாலை மண்டபத்திலும் இலவச மருத்துவ பரிசோதனையும் இலவச மருந்து வழங்கலும் நடாத்தப்பட்டு வருகின்றன.

இவ்இலவச மருத்துவ சேவையை காரைநகர் ஊர்காவற்றுறை நோயாளர்கள் உரிய முறையில் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தினங்களில் காலை மருத்துவசேவை 9.00 மணிக்கும், பி.ப மருத்துவ சேவை 1.00 மணிக்கும் ஆரம்பிக்கப்படுகிறது. இத் தினங்களில் நடைபெறும் மருத்துவ சேவை அடுத்துவரும் 6 மாதங்களுக்கு தொடர்ந்து இடம் பெறும் என ஊர்காவற்றுறை பிரிவு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் சோ. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ற)

## நிதியுதவி

புங்குடுதீவு சிவலைப்பிட்டி மாதா அபிவிருத்தி சங்கத்திற்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 50 ஆயிரம்ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்நிதியிலிருந்து பெண்களுக்கான கைத்தொழில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (ப-126)

## பௌர்ணமி விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேசசபை கச்சாய் பொதுநூலக அபிவிருத்திச் சபையின் கலை கலாசாரப் பரிவினரால் நடாத்தப்படும் பௌர்ணமி விழா இன்று புதன்கிழமை பி.ப. 1.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் மேல்மாடி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நூலக அபிவிருத்திச் சபைத் தலைவர் கு.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கொடிகாமம் உதவிப்பிரதேச செயலர் திருமதி தேவந்திபாபு பிரதம விருந்தினராகவும் கொடிகாமம் மத்தி கிராமசேவையாளர் கே.சுபாஸ் சந்திரபோஸ், கொடிகாமம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி ஏ.உமாதேவி ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் தென்மராட்சி அரசியல்துறைக் கோட்டப் பொறுப்பாளர் மு.இரத்தினம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற)

## இசைநடன சங்கமம்

(பொன்னாலை)

யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகம் நடாத்தும் "கிராமிய இசை நடனச் சங்கமம்" இன்று புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விசை நிகழ்ச்சியானது சமூக சேவை நிதிக்காக நடத்தப்படும் ஒரு நிகழ்ச்சி என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ப-49)

## அடிப்படை வசதியில்லை

(கல்வியன்காடு)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகிறது. இப்பாடசாலையில் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக 45 ஆசிரியர்கள் தேவையான நிலையில் இங்கு 31 ஆசிரியர்கள் மட்டுமே கடமையில் உள்ளன.

அத்துடன் இங்கு 1-11வரையான வகுப்புக்கள் உள்ளபோதும் உரிய இட வசதியின்மையால் பெரும பிரச்சினையாகக் காணப்படுகின்ற அதேவேளை தளபாட பற்றாக் குறையும நிலவுகின்றது என சுட்டிக்காட்டப்படுகிறது. (க-74)

## விடைத்தாள்கள் மதிப்பீட்டுக்காக கொழும்புக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் முதலாவது இறுதியாண்டு பரீட்சையினதும் இரண்டாவது இறுதியாண்டு பரீட்சையினதும் விடைத்தாள்கள் இவ்வாண்டு முதல் கொழும்புக்கு அனுப்பி மதிப்பீடு செய்யப்பட விருக்கின்றன.

இதன் மூலம் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள ஐயப்பாடுகள் நீக்கப்படும் எனறும் தரமான பரீட்சை பெறுபேறுகள கிடைக்க வழி செய்யப்படும் என்றும் யாழ். தொழில்நுட்ப கல்லூரி அதிபர் தெரிவித்தார். (ற-5)

## திருமந்திர மாநாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் இணுவில் மஞ்சத்தடி விவேகானந்த கிராம முன்னேற்றச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் திருமந்திர மாநாடு இன்று புதன்கிழமை பி.ப.3.00 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இளைப்பாறிய பேராசிரியர் திருமுறைச்செல்வன் ச.விநாயகமூர்த்தி "தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே" எனும் விடயம் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ற-19,117)

## சிரமதானம்

கார்த்திகை மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நாளை முன்னிட்டு தீவகப்பிரதேசத்தில் அமைந்துள்ள சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் தீவக பிரதேச மக்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ப-125)

## பாரிய குற்றங்கள் புரிந்தவர்களுக்கு எதிரான

# வழக்குகளை தாக்கல் செய்யும் அதிகாரம் சட்டமா அதிபருக்கு வழங்கப்படவேண்டும்

(கொழும்பு)

பாரிய குற்றங்கள் புரிந்த சந்தேக நபர்களுக்கு எதிராக நேரடியாக வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கான அதிகாரம் சட்டமா அதிபருக்கு வழங்கப்படவேண்டும் என சொலிஸ்ரர் ஜெனரல் டீ.ஆர்.சில்வா அரசைக் கேட்டுள்ளார்.

பாரிய குற்றங்களைப் புரிந்த சந்தேக நபர்களுக்கு எதிரான உயர்நீதிமன்ற வழக்கு விசாரணைகள் தாமதமாகும் போது சாட்சிகள் பயமுறுத்தப்பட்டு வருகின்றார்கள்.

இதனால், வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், குற்றவாளிக்கு எதிராக நேரடியாக வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கான அதிகாரம் சட்டமா அதிபருக்கே வழங்கப்படவேண்டும எனவும் சொலிஸ்ரர் ஜெனரல் டீ.ஆர்.சில்வா மேலும் அரசிற்கு ஆலோசனை கூறினார்.

இதற்கிடையில் மேன் முறையீட்டு பணிகளை பரவலாக்கும பொருட்டு, அரசு சட்ட திருத்தங்கள் பற்றிய நகல் சட்டமூலம் ஒன்றை பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-60)

## மட்டு. நகர்ப் பகுதிகளில் தேடுதல் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதிகளில் கடந்த ஞாயிற்றுக கிழமை காலை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து சுற்றி வளைத்து தேடுதல் சோதனை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

திமிலத்தீவு, புதூர் ஆகிய பகுதிகளிலேயே இந்தச் சுற்றி வளைப்புத் தேடுதல் சோதனை நடாத்தப்பட்டதாக மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பொலிஸ் அதிகாரி ஹரிச் சந்திரா பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகர்ப் பகுதிகளில் அண்மைக் காலமாக தொடந்து இடம்பெற்று வரும் படுகொலை மற்றும் தாக்குதல சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் முகமாகவும் சட்டவிரோத ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் கைப்பற்றும் முகமாகவுமே இத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதன்போது சட்ட விரோத ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. (ற-8)

## சங்கானை பிரதேச செயலகத்தில்

# மிதிவெடி விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெறும்

(பொன்னாலை)

சங்கானைப் பிரதேச செயலகத்தில் மிதிவெடி அபாயம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது.

சர்வோதய நிறுவனத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகள் கருத்துரைகளை வழங்குவர்.

இதில் மிதிவெடி அபாயம் அதிகம் காணப்படும் பிரதேசங்களிலுள்ள மாதர் சங்க அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகம் போன்றவற்றின பிரதிநிதிகளும் , ஏனைய கிராமியப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு இவ் விழிப்பு ணர்வு பற்றிய அறிவைப் பெறமுடியும என்று அறிவிக்கப்பட்டுளளது. (ப-49)

## நாடகம் அரங்கேற்றம்

(இணுவில்)

யாழ்.பல்கலைகழக கலை துறையினரது ஏற்பாட்டில் "செவ்விளக்கு" எனும் நாடகம் அரங்கேற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 29,30,31 ஆம் திகதிகளில் மாலை 6.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்தில் இந்த நாடகம் இடம்பெறவுள்ளது.

சமூக உணர்வுகளையும் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் கிளர்ச்சிகளையும் சித்தரிக்கும் சீன நாடக மரபிற்கு ஏற்ப இது அமைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.(ப-122)

## தேசிய சம்பளக் கொள்கையை உருவாக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

தேசிய சம்பளக் கொள்கை ஒன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதறகான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு விசேட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொங்கொட தெரிவித்துள்ளார்.

தேசிய சம்பளக் கொள்ளை ஒனறு இல்லாததன் காரணமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் தோன்றும் நெருக்கடிகளால் பொதுச் சேவைகள் பாதிப்படைகின்றன.

எனினும், இந்தச் சம்பளக் கொள்கை நடைமுறைபபடுத்தப்படுவதற்கு முன்னதாக அரச சேவைகளில் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கான திஸ்ஸ தெய்வேந்திர சம்பள மீளாய்வு ஆணைக்குழுவின் ஆலோசனைகள் கிடைக்கப்பெற வேண்டும்.

இதற்கான ஆலோசனைகள் வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிககப்படுவதற்கு முன்னதாக கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. திஸ்ஸ தெய்வேந்திர சம்பள மீளாய்வு ஆணைக்குழுவின் சம்பள ஆலோசனைகள் கிடைத்தபின்னர், தேசிய சம்பளக் கொள்கை ஒன்றை உருவாக்கும் நடைமுறைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ற-121)



புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட செல்வி ம.சுப்பிரமணியம் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு வெற்றிக் கேடயத்தை வழங்குவதையும், அதிபர் நா.பஞ்சலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் ஆகியோர் விழா மண்டபத்தில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# தேர்குல் முறை மாற்றப்பட்டால் சிறுபான்மையினருக்கே பாதகம்

## பஷீர் சேகுதாவூத் எச்சரிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார தேர்தல முறை மாற்றம் செய்யப்படுமானால் சிறுபான்மையினருக்குப் பாதமான விளைவுகளே ஏற்படும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகுதாவூத் தெரிவத்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஏறாவு,ர் அரபா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இந்தத் தேர்தல் முறையை ஒட்டு மொத்தமாக மாற்றியமைபபதற்கு தமிழ்மக்கள் எப்பொழுதும், எந்த விதத்திலும் ஆதரவு வழங்கமாட்டார்கள். மலையக மக்களையும் இந்த விடயத்தில் ஏமாற்ற முடியாது.

அவர்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பார்கள்.

இதே போல் தேர்தல் முறைமை மாற்றயமைக்கும் பட்சத்தில் கடந்த 15 ஆண்டு காலமாக முஸ்லிம் சமூகத்தினருக்கு இருந்த பேரம் பேசும் சக்தி இல்லாமல் போய் விடும். அத்துடன், சமூகரீதியான வளர்ச்சியும் இதன் மூலம் கிடைக்கமாட்டாது.

இந்த நாட்டில் சிங்கள தமிழ சமூகத்தினருடன், முஸ்லிம்களுககும் சமத்துவ அரசியல் அந்தஸ்துடன் வாழ்வதற்கு இத்தேர்தல் முறை குந்தகமாக அமைந்துவிடும்.

எனவே, முஸ்லிம் சமூகம் இதனை நினைவில் நிறுத்தி மிக விரைவில் நடைபெறவிருபபதாக எதிர்வு கூறப்படும் சர்வஜன வாக்கெடுப்பில் பங்கேற்க வேண்டிய பொறுப்பு முஸ்லிம்களுக்கு உண்டு.

இந் தேர்தல் முறைமை 15 இலட்சம் முஸ்லிம்களது தலைவிதியை மாற்றும் ஒன்றாகவே அமையும் என்பதை அனை வரும உணர்ந்து கொள்ள வேண்டும் எனத்தெரிவித்தார். (ற-121)


# விஷேட அறிவித்தல்

பறச்சேரிவெளியில் உள்ளடக்கப்பட்ட "இராசாளிக் குளக் கரை", "சூரியவெளி", "சூரியவெளிக்காடு" போன்ற இடங்களிலுள்ள குடியேற்றத்துக்காக வாங்கப்பட்ட காணிகள் நாவாந்துறை வடக்கு சோனகதெரு பகுதிக்குள் யாவும் அடங்கப்பட்டுள்ளது. தற்போது இக்காணிகளில் "HAL-LOW TRUST" நிறுவனம் கண்ணிவெடி அகற்றும் மண்களை மேற்படி இடத்தில் போட்டு நிறப்புகிறது. இந்த மண்போட்டு நிறப்பும் பகுதிகளும் அத்துடன் இணைந்துள்ள பகுதிகளும் காணிகள் உரிமையாளர்களாகிய எங்களுக்கு உரித்துடையதும், சொந்தமானதுமாகும். இதில் 9 பரப்புக் காணி "அல்ஹறப்றா" முஸ்லிம் பாடசாலைக் குரியதும் அடங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பிரதேச செயலாளர் அவர்களால் 3-8-2004 இல் "உதயன்" பத்திரிகையில் வெளியிட்ட செய்தியின்படி மேலே கூறப்பட்ட காணிகளின் சம்பந்தமாக தவறான தகவல்களோ அல்லது ஏமாற்றப்பட்டோ, போலி ஆவணங்களை காட்டியோ தவறுகள் செய்ய யாரும் முயற்சித்தால் உடன் எங்களுக்கு கீழ்க் கண்ட விலாசத்துக்குப் பதிவுத் தபால் மூலம் தெரியப்படுத்தும்படி வேண்டுகிறோம். இது சம்பந்தமாக 30-11-2004 க்கு முன் தெரியப்படுத்தும்படி வேண்டுகிறோம்.

"காணி உரிமையாளர்களின் சார்பாக"

R.M.IMAM,
"ATTORNEY - AT- LAW"
A/9 - $G^2$ - NATIONALHOUSING SCHEME
MALIGAWATTA
COLOMBO - 10

(8948)

# க.பொ.த (சாதாரண தரம்)
# மாதிரிப் பரீட்சை -2004

நேரம்: 1மணி **விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும் பகுதி I**


ஆக்கம்: திருமதி.தங்கராணி கிருபானந்தா
யா/செங்குந்தா இந்துக்கல்லூரி.

*சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.*

01.சுகதேகி ஒருவரின் சுருக்க அமுக்கத்தை சரியாகக் காட்டுவது
**i)120mmhg** **ii)120cmHg** **iii)80mmHg** **iv)120mmHg**

02.கண்ணனும் ரவியும் $4ms^{-1}$ வேகத்துடன் நடக்கிறார்கள். இதிலிருந்து அறியக்கூடியது
i)கண்ணன் ரவி ஆகிய இருவரும் எதிர்த்திசையில் நடக்கிறார்கள்
ii)கண்ணனும் ரவியும் ஒரேதிசையில் நடக்கிறார்கள்
iii)கண்ணன் $4ms^{-1}$ வேகத்துடனும் ரவி $4ms^{-1}$ வேகத்துடன் கண்ணன் நடப்பதற்கு எதிர்த்திசையில் நடக்கிறான்
vi)கண்ணன் ரவி இருவரும் $4ms^{-1}$ வேகத்துடன் ஒரேதிசையில் நடக்கிறார்கள்.

03.குறித்த ஒரு வேகத்துடன் மேல்நோக்கி எறியப்பட்ட கல் அதி உயரத்தை அடைந்த நிலையைக் காட்டும் வேகநேர வரைபு




i) ii) iii) iv)

04.**100g** பொருள் ஒன்றை கையில் வைத்திருக்கும்போது கை உணரும் நிறை அண்ணளவாக
**i)0.1N** **ii)1000N** **iii)100N** **iv)1N**

05.தாவரக் கலத்தையும் விலங்குக் கலத்தையும் வேறு பிரித்து அறிய உதவும் அமைப்பு எது?
i)கலச்சுவர் ii)கலமென்சவ்வு iii)பச்சையவுருமணி iv)புன்வெற்றிடம்

06.இலிங்கமுறை இனப்பெருக்கத்தின் போது பெற்றோரின் இயல்புகள் எச்சங்களுக்குக் கடத்த உதவுவது
i)கரு ii)பரம்பரை அலகு iii)நிறமூர்த்தம் iv)இழைமணி


07.




படத்தில் காட்டியவாறு நீர், உப்புக்கரைசல் என்பவற்றுள் சம நீளங்களைக் கொண்ட உருளைக்கிழங்குத் துண்டுகள் இடப்பட்டன. இவற்றில் பெற முடியாத அவதானம்
i)நீரிலிட்ட உருளைக்கிழங்குத் துண்டு நீளத்தில் அதிகரிக்கும்
ii)உப்புக்கரைசலிடப்பட்ட உருளைக்கிழங்குத் துண்டின் நீளம் குறைந்து காணப்படும்
iii)இரு துண்டுகளும் விறைப்பாகக் காணப்படும்
iv)உப்புக்கரைசலிடப்பட்ட துண்டு மெதுமெதுப்பாக இருந்தது

08.பகுதிபடக் காய்ச்சி வடித்தல் மூலம் வேறு பிரிக்கக்கூடிய பதார்த்தம்
i)இரும்புத்தூளும் காந்தமும் ii)சீனியும் மண்ணும்
iii)உப்பும் கரியும் iv)பெற்றோலும் மண்ணெய்யும்

09.





சமநிலைப்படுத்தப்பட்ட உபகரண அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது. Xஎப்பதார்த்தமாக இருக்கும்போது இரு குழாய்களையும் வெப்பப்படுத்தும்போது **B** மேல் நோக்கி அசையும்?
**i)S** **ii)Mg** **iii)Zn** **iv)Al**

10.பின்வரும் எதில் இலத்திரன் காணப்படாது
i)$Na^+$ ii)$K^+$ iii)$H^+$ iv)$Cl^-$

11.x எனும் மூலகத்தின் அணு எண் 19 திணிவெண் 30 இதனைச் சரியாகக் காட்டுவது
i) ${}^{30}_{19}X$ ii) $X^{19}_{30}$ iii) $X^{30}_{19}$ iv) ${}^{19}_{30}X$

12.




பதார்த்தம் ஒன்றை வெப்பமாக்கும் போது பெறப்பட்ட வெப்பநிலை மாற்றத்திற்கும் நேரத்திற்குமான வரைபு அருகே காட்டப்பட்டுள்ளது. இதன் கொதிநிலை யாது?
i) $40^0C$ ii) $80^0C$ iii) $110^0C$ iv) $0^0C$

13.பின்வருவனவற்றில் எதனில் வால்வு காணப்படுவதில்லை?
i)நாளம் ii)நிணநீர்க்கான் iii)நாடி iv)வாயினாளம்


14.மிக உயர்ந்த கொதிநிலையைக் கொண்ட மூலகம் எது?
i) Na ii) Cl iii) Si iv) Ar

15.பதார்த்தம் ஒன்று எரிக்கப்பட்டபோது உருகி நீலநிறச் சுவாலையுடன் எரிந்து மூக்கை அரிக்கும் மணத்தைக் கொடுத்தது
கூற்று **A:** இது ஓர் உலோகமாகும்
கூற்று **B:** இங்கு அமில ஒட்சைட்டு பெறப்படும்
கூற்று **C:** இங்கு பெறப்படும் வாயு நச்சுத்தன்மையுடையது
இவற்றுள் சரியானது
**i) A,B** **ii) A,C** **iii) B,C** **iv) A,B,C**

16.காபன் தன்மயமாக்கலில் பயன்படும் சக்தி
i)சூரிய ஒளி ii)சூரிய வெப்பம்
iii)சூரிய ஒளியும் வெப்பமும் iv)ஒலி


17.பின்வரும் எத்தாவரத்தில் ஒளித்தொகுப்பு நடைபெறமாட்டாது?
i)சவுக்கு ii)தேக்கு iii)சமண்டலை iv)பனை

18.





கூற்று **P:** மின்னோட்டம் **B**யிலிருந்து **A** நோக்கிச் செல்லும்
கூற்று **Q: B** வடமுனைவு **A** தென்முனைவு ஆகும்
கூற்று **R:** அகவணியாக **Cu** பயன்படும்
இவற்றுள் சரியானது
**i) PQ** **ii)QR** **iii) PQR** **iv) PR**

19.கடத்தி ஒன்றில் மின்னோட்டம் பாயும் திசையையும் மின்னோட்டத்தையும் சரியாகக் காட்டும் படம்




20.




மின்சுற்றில் வோல்ற்றுமானியின் வாசிப்பு
**i) 6V** **ii) 4V** **iii)2V** **iv)2/3V**

21. மின்குமிழ் **A,B,C**யினூடாகச் செல்லும் மின்னோட்டம் பற்றிய கூற்றில் சரியானது
i)**AB**யினூடாக சமமின்னோட்டம் செல்லும்
ii)**AB**யினூடாக சமமின்னோட்டமும் **C**ல் கூடியளவு மின்னோட்டமும் செல்லும்
iii)**A,B**யில் கூடிய மின்னோட்டமும் **C**ல் குறைந்த மின்னோட்டமும் செல்லும்
iv)**B,C**ல் சம மின்னோட்டம் செல்லும்

22. **1000W 1500W** அமிழ்ப்பு வெப்பமாக்கியில் **1000W** அமிழ்ப்பு வெப்பமாக்கியிலும் பார்க்க **1500W**ல் கூடிய சுருள்கள் காணப்படுகிறது. இதற்குக் காரணம்
கூற்று **A:** கம்பியின் நீளத்தை அதிகரித்து தடையை அதிகரிக்கச் செய்யலாம்
கூற்று **B:** தடையை அதிகரிப்பதனால் பெறப்படும் வெப்பசக்தியை அதிகரிக்கலாம்
i)A சரி ii)B சரி iii)A சரி, Bபிழை iv)A,Bசரி

23.வளியில் **20HZ** மீடிறனைக் கொண்ட அலை ஒன்று பயணம் செய்கிறது. அவ்வலையின் வேகம் $350 ms^{-1}$ ஆகும். அலையின் அலைநீளம் யாது?
**i)20x350 m** ii) $\frac{350}{20}$ m iii) $\frac{20}{350}$ m iv) $\frac{350}{20}$ cm

24.வெள்ளொளியிலுள்ள 7 நிறங்களையும் வேறுபிரித்து அறியப் பயன்படுத்தக்கூடியது
i)குவிவு வில்லை ii)கண்ணாடிக்குற்றி
iii)கண்ணாடி அரியம் iv)குழிவு ஆடி

25.மெனின்ஜைற்றிசு நோய் பற்றிய கூற்றுக்களில் தவறானது
i)சருமமென்சவ்வுகள் அழற்சிக்கு உள்ளாகும்
ii)இது ஓர் ஆட்கொல்லி நோயாகும்
iii)இந்நோய் ஆண்களில் மட்டும் ஏற்படும்
iv)இந்நோயின் பக்கவிளைவாக பார்வைக்கோளாறுகள் ஏற்படும்


26.அகஞ்சுரக்கும் சுரப்பிகளின் தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் சுரப்பி
i)அதினீரல் சுரப்பி ii)கபச்சுரப்பி
iii)கேடயப்போலிச் சுரப்பி iv)தைமசு சுரப்பி

27.கொதிநீரில் அவித்து முளைக்கவிடும் வித்து
i)இபில்இபில் ii)தேக்கு iii)தோடை iv)நெல்லு

28.$CO(NH_2)_2$ல் ஐதரசனின் சதவீதம் **[C=12 O=16 H=1 N=14]**
**i)6.66** **ii)66.6** **iii)3.33** **iv)3.2**

29.உருகுநிலை கூடிய மூலகம்
i)செப்பு ii)தங்குதன் iii)ஈயம் iv)நாகம்

30.




படத்தில் காட்டியவாறு வேறுபட்ட செறிவில் ஒரே கனவளவு அமிலங்கள் எடுக்கப்பட்டு **Mg,Zn** என்பன ஒரேநேரத்தில் இடப்பட்டன. தாக்கவீதம் அதிகரிக்கும் ஒழுங்கையும் குறைவாகக் காணப்படும் அமைப்பையும் சரியாகக் காட்டுவது
**i)C,B** **ii)B,C** **iii)A,B** **iv) C,D**

31.இரும்புத்தாதிலிருந்து இரும்பு பிரித்தெடுக்கப்படும் முறை
i)மின்பகுப்பு ii)ஒட்சியேற்றல் iii)பகுதிபடக்காச்சுதல் iv)தாழ்தல்

(07 ஆம் பக்கம் பார்க்க......)

# குடும்ப அமைப்பில் முதியவர்கள்

கலாநிதி
என். சண்முகலிங்கன்

(தொடர்ச்சி....)

நிகழும் போரின் கொடுமுகத்தில் அதிகளவு எண்ணிக்கையில் முதியவர்கள் குடும்பச் சூழலை இழக்கும் அவலம் உணரப்படுகின்ற அதேவேளையில், தப்பிப்பிழைத்த குடும்பங்களுககுள்ளும் தள்ளப்படுகின்ற முதியவர் பாடும் இங்கு நம் கவனத்திற்குரியதாகும். சீவிய உருத்துக்காட்டி வீடு எழுதுகிற நடைமுறைக்குப பதிலாக, 'அறுதியாக' உறுதி எழுதுவிக்கும் நிர்ப்பந்தக் கலியாணங்களும், சீவிய உருத்தையே ஆத்தமிழக்கச் செய்யும் நடைமுறைகளுமாகக் குடும்ப உடைவுகள் வெளிப்படும் களங்கள் பல.

ஒரே வீட்டிலேயே இரண்டு உலைவைப்புக்கள், அலலது ஒரே வளவில் இரண்டு குசினி சமையல்களாய் குடும்ப அமைப்புக்குள்ளேயே முதுமையின் புகைச்சல்கள் தெரியும். தமிழர் பண்பாடு, தமிழர் மதம் என்றெல்லாம் பெரிதும் பேசபீபடும் இக்காலத்து நடைமுறையில், குடும்ப உறவுகள் சார்ந்த நியமங்கள் கேள்விக்குறியாகும்.

* ஒரு தாய் ஐந்து பிள்ளைகளையோ, பத்துப் பிள்ளைகளையோ அரவணைத்து வளர்க்கமுடிகிறது. ஆனால் பிள்ளைகளில் ஐந்து ஒரு தாயைப் பராமரிப்பது கேள்வியாகும் நிலை. "நெடுக நானோ பார்க்கிறது. மற்றப் பிள்ளையளும் பார்த்தால் என்ன?" என்ற இழுபறிகளிடை தாய் முதியோர் இல்லத்தில் சேர நிர்ப்பந்திக்கப்படல்.

* பிள்ளை இல்லையே என்று ஒருவனைத் தத்தெடுத்து வளர்த்து சொத்தையெல்லாம் அவனுக்கேயாக்கி, இன்று அவனால் துரத்தப்பட்டு தாய முதியோர் இல்லத்தில் தஞ்சமடைதல் தவிர்க்கமுடியாததாதல்.

* "நேற்றுவரை அன்பாக இருந்த மகன் இன்று மருமகளின் சொல்லைக் கேட்டு என்னைத் தளளிவிடடான". வீட்டைவிட்டு கேற்றைச்சாத்தி வெளியே தள்ளிய நிலையில் முதியோர் இல்லத்தில் ஒதுங்கிக்கொள்ளுதல்.

* ஆறு பெண் சகோதரிகளுக்கு அண்ணன். கஷ்டப்பட்டு ஆறு சகோதரிகளுக்கும் வரன் தேடிக் கணடு கொள்ளும் முயற்சியிடை தனக்கென ஒரு வாழ்வைக் காணமுடியாத நிலை. இன்று வாழ்வு கண்ட ஒரு சகோதரியின் நிழலுமின்றி முதியோர் இல்லத்துக்கு நடை கட்டுதல்.

* தாங்கமுடியாத வறுமை நிலை. "அந்தச் சின்னக் குடிசைக்குள் எப்பிடி அவையளையும் வைச்சுப்பாக்கிறது" என வறுமையின் நிர்ப்பந்தத்தில் முதியோர் இல்லத்துக்கு அழைத்து வந்துவிடும் துயரம்.

என நீளும் பல சோகக் கதைகளை எங்கள் ஆய்வுப் பதிவுகள் பேசும்.

மூப்பியல் தொடர்பான ஆய்வு அவதானங்களை ஒட்டுமொத்தமாக நோக்குகையில், நிகழும் போரின் கொடுமுகத்தில் தம் அன்புக்குரியவர்களை இழந்ததனால் அல்லது பிரிந்ததனால் தனிமைப்பட்டவர்களின் எண்ணிக்கை கணிசமானளவு என்பது உண்மைதான். கூடவே இருந்தும் இல்லாத நிலையில் பெற்றோரைத் தள்ளிவிட்ட நலமைகளும் கொஞ்சமல்ல. போர்க்கால இடப்பெயர்வின்போது வீட்டுக்குக் காவலாக அலலது மணடு வந்து அழைத்துச் செல்வதாகச் சொல்லி முதியோர் இலலங்களில் விடப்பட்டு, இனறு வரை காத்திருத்தலில் கழியும் முதியவர்களின் நிலை தொடர் கதைதான்.

இளைய தலைமுறையினர் தாம் முதிய தலைமுறையின் முகிழ்ப்புகள் என்பதனை மறந்துபோனதும், இதன்வழி முதிய தலைமுறை தங்களைப பலவீனமான, செயல் திறனற்றவர்களாக் கருதி ஒதுங்க நேர்ந்ததும் இன்றைய முதியோர் அவலங்களின் பின்னணியாக உணரப்படலாம். கூடவே புதிய வாழக்கைமுறையின் தவிர்க்க முடியாத விதியாக இவர்கள் தனித்துவிடப்படுவதும் அவதானத்திற்குரியதாகலாம்.



இந்நிலைமைகளை மேலும் தெளிந்துகொள்வதில் மூப்பியல் தொடர்பான சமூகவியல் தரிசனஙகள கைகொடுக்கலாம். இந்தவகையில்,

1.**Cumming & Hendry** ஆகியோர் அறிமுகம் செய்த, *விலகிச் செல்லும் கோட்பாடு* (**Disengagement Theory**).

2.**Aronold Rose** இன், *உட்பண்பாடு அல்லது உப பண்பாட்டுக் கோட்பாடு* (**Sub - Culture Theory**).

3. **Palmore** முன்வைத்த, *செயற்பாட்டுக் கோட்பாடு* (**Actibity Theory**).

என்பன முக்கியமானவை.

வயதாக வயதாக, வாழும் சூழலில் கொண்ட ஈடுபாடு முதியவருக்குக் குறைகின்றது. தாம் சார்ந்த சமூகத் தொடர்புகளை அறுப்பதன் வழி அவர்கள் மகிழ்ச்சிகொள்கிறார்கள் என்பது விலகிச்செல்லும் கோட்பாட்டின் முன்மொழிவாகும். இவர்களது பார்வையில் முதுமை என்பது நோய், அங்கவீனம், இயலாமை தொடர்பான ஒரு மருத்துவப் பிரச்சினை மடடுமே. இதற்கு வேண்டிய வசதிகள், வளங்கள் தரப்பட்டால் போதுமானது என்பது இவாகள் தரிசனம் வாழ்க்கைக் காலத்து இறுதிநாட்கள், முன்னைய நாட்களைப போல அமையமாட்டா, அவை வித்தியாசமானவை என்பதனை ஏற்றுக் கொண்டு ஒதுங்குதலே இவர்கள காட்டும் தீர்வாகிறது.

உட்பண்பாடு அல்லது உபபண்பாட்டுக் கோட்பாடு என்பது தமமை ஒத்த முதியோர் குழுமததினரின் விழுமிய, நியமங்களுக்குள அடையாளம் கணடு உறவுபூணுதலின் வழி முதுமையை அர்ததமுள்ளதாகக் லாம் என முன்மொழிகிறது.

இந்த இரணடு கோட்பாடுகளுமே, பலவீனமானவைகளாக விமர்சனங்களை எதிர்கொள்வன. முதுமை - இளமை என்று கட்சி கட்டவைக்கும் குறுகிய சிந்தனைகளாகவும் கருதப்படுவன. எனினும் எமது பண்பாட்டுப் புலங்களில் இந்த இரண்டு கோட்பாட்டுச் சிந்தனைகளையும் இசைவாக்கிய பண்பாட்டுத் தீர்வுகள் சிலவற்றை இங்கு நாம் கவனத்தில் கொள்ளமுடியும். எடுத்துக்காட்டாக வற்றாப்பளை கண்ணகையம்மன் கோயிலில் தொடங்கி கதிர்காமத்தில் முடியும் தரையாத்திரையில் இசையும் முதுமைப் பருவததினரின் வாழ்வுக் கோலத்தினைக் குறிப்பிடலாம். இனி மீள்வது நிச்சயமில்லை என்ற நம்பிக்கையுடனான விலகல் யாத்திரை வழியில் கதைமுடிப்பவர், தங்கி விடுபவா சிலர்; மீளத்திரும்புபவர் பலர்.

கிட்டத்தட்ட 3மாத கால விலகல், குடும்ப உறவை மேலும் வலிமையானதாக்கிவிடுகிறது. அதேவேளை இந்த 3மாத காலமும் ஒத்த உட்பண்பாட்டுக் குழுமத்துடன் இனிதாய்க் கழிந்தும் விடுகிறது.

இந்தப் பண்பாட்டு ஏற்பாடுகள் கூட இன்றைய எங்கள் சமூகச் சூழலில் சாத்தியமற்றுப்போனமை இங்கு கவனத்திற்குரியதாகும். **Palmore** இன் செயற்பாட்டுக் கோட்பாடே உலகளாவிய நிலையில் இன்று பெரிதும் முதன்மைபெறக் காணலாம். 2000ஆம் ஆண்டினை செயற்படும் முதுமை (**Active Aging**) என்ற தொனிப்பொருளில் ஐ.நா அமைப்பு பிரகடனப்படுத்தியதன் பின்னால் இதன் முக்கியத்துவத்தை உணரமுடியும்.

தொடர்ந்து செயற்படுவதன் வழி முதியவர்கள் திருப்தியும, மகிழ்ச்சியும் காண்கிறார்கள்; காணமுடியும் என்பது இந்தக் கோட்பாடடின் அடிப்படையாகும். முதுமை இளமை என்ற பேதம் கடந்து வேறுபடும பாத்திரங்களில் தொடர்ந்து செயற்படுதலின வழி முதுமைப்பருவம் பிரச்சினையாவது தவிர்க்கப்படும் என்பது இவர்களின் முன்மொழிவாகும்.

இந்தவகையில் சமூகத்து முதன்மையை, அந்தஸ்தைப் பேணி முதுமையை இனிமையான, பயனான பருவமாகக் காணும் எடுத்துக்காட்டுகளை எமது புலங்களிலும் காணமுடியும். சோர்ந்து தளர்ந்துவிடாதபடி முதுமைப்பருவத்தினை, முதியவரும் புரிந்துகொள்வதுடன் சுமுகமாகச் செயற்படவும் பல செயற்திட்டங்கள் 2000ஆம் ஆண்டில் உலகளாவிய அளவில வகுக்கப்பட்டு நடைமுறைபபடுத்தப்படுகின்றமையைக் காண முடியும்.

குறிப்பாகக் கல்விவழி மீள் சமூக மயமாக்கம் என்பது இலக்காக விளங்குகின்றது. நியமமற்ற கல்விச் செயற்பாடுகளின் வழி முதியவர் - இளையவர் தொடர்பான பரஸ்பர உளச்சார்பு மாற்றம், விழுமிய மாற்றம் என்பன எதிர்பார்ககப்படுகின்றன.

கூடவே முதுமைப்பருவப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக முன்பு கருதப்பட்ட முதியோர் இல்லங்கள் என்ற எண்ணக்கருவாக்கம் இன்று பெரிதும் தளர்ந்துபோனமையும் இங்கு அறிவுறுத்தப்படக் காணலாம். குறிபபாக கீழைப் பண்பாட்டுப் புலங்களில் முதுமைப்பருவ மூச்சு இந்த இல்லங்களுக்குள்ளேயே பெருமூச்சாக ஒலிப்பது கவனத்திற்குரியதாகும்.

**"நாங்கள் குடும்பத்தோட வாழ்ந்தனாங்கள். குடும்பத்துக்காக வாழ்ந்தனாங்கள். பாழாய்ப்போன நாட்டுநிலை என்னையும் பிள்ளைகளையும் பிரித்துவிட்டது. காணாமல் போன என் மகன் வருவான். நாங்கள் மீளவும் குடும்பமாய் வாழ்வம"**

என்ற நம்பிக்கையிலிருந்து,

**"என்னை அவர்கள் கேற்றுக்கு வெளியிலை தள்ளி இங்கு நான் வந்தாலும் என்ரை பேரப்பிள்ளைகளோடை, பிள்ளைகளோடை வாழ்ந்த அந்தநாள் எவ்வளவு மகிழ்ச்சியானது. நான் குடுத்துவைச்சது இவ்வளவு தான்."**

எனும் ஏக்கம் வரை இந்த மூச்சின் எல்லையைக் காண முடியும்.

எல்லாமே உணர்த்தும் உண்மை ஒன்றுதான். '80களில் உலக முதியோர் ஆண்டு வேளை வியன்னாவில் 120 நாடுகள் கூடி மீள வலியுறுத்திய உயிர்மூச்சான அதே குரல் தான், இன்றைய செயற்படும் முதுமை தொடர்பான விழிப்புணர்வு வேளையிலும் ஆதார சுருதியாக ஒலிக்கக் கேட்கலாம்.


**தவிர்க்கமுடியாத சமூக நிலைமைகளில், முதியோர் இல்ல அமைப்புகள் வேண்டப்பட்டாலும் அவை கூடத் தனித்த தீவுகளாகப் போகாமல், சமூக - குடும்ப ஒருங்கிணைவு ஏற்பாடுகளுடன் கூடியதாகவே அமையவேண்டும்.**

முதுமைப்பருவம் இயல்பான குடும்பச்சூழலில், சமூகச்சூழலில் சுதந்திரமாய் விளங்கும்போதே அர்த்தமுள்ளதாகும்.

*-நன்றி முதுமை*

## விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும்...

*(-ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

32. 

Xல் எந்நிறையை இடும்போது கோல் சமநிலையில் இருக்கும்
i)6N ii)4N iii)10N iv) 40N

33. பொருள் ஒன்று வளியல் நிறுக்கப்பட்டபோது அதன் நிறை 160N. இப்பொருள் அரைவாசி அமிழ்நதநிலையில் தோற்றநிறை 140N. இப்பொருள் முழுமையாக அமிழந்த நிலையில் தோற்றநிறை 128N. இங்கு பெறப்படும் மேலுதைப்பு யாது?
i)20N ii)12N iii)128N iv)32N

34.இரத்தினக்கற்களை அளக்கப் பயன்படும் அலகு.
i)கிராம் ii)மஞ்சாடி iii)பவுண் iv)கரட்டு

35.இறப்பர்பால் திரட்சியடையக் காரணமாக இருப்பது
i)வைரசு ii)பற்றீரியா iii)பங்கசு iv)திரட்சி நிரோதி

36.பெற்றோலியக் கூறுகளிலிருந்து தயாரிக்கப்படாத பொருள்
i)பூச்சி நாசினி ii)பூச்சு iii)மருந்து iv)கம்பளி

37.அடி, காவி, சேகரிப்பான் ஆகியவற்றைக் கொண்ட இலத்திரனியல் உபகரணம்
i)இருவாயி ii)திரான்சிஸ்ரர் iii)கொள்ளளவி iv)தடை

38.நரம்புக் கருவியாகக் காணப்படுவது
i)பென்ஜோ ii)றபான் iii)உடுக்கு iv) சைலோபோன்

39.தாவரங்கள் நைதரசனை உள்ளெடுக்கும் வடிவம் யாது?
i)$NO_3^-$ ii)$NO_2^-$ iii)$NH_4^+$ iv)$NH_3$

40.பழைய பாணில் காணப்படும் கருமை நிறமான புள்ளிக்கு காரணமான நுண்ணங்
i)பரமேசியம் ii)அமீபா iii)ஸ்பைரோகைரா iv)மியூக்கத்

**நாளை விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும் பகுதி வினாத்தாள் வெளிவரும்.**

# டெஸ்டில் சதமடிக்கும் மெக்ராத் பத்து விக்கெற் பெறுவாரா?

அவுஸ்திரேலிய-இந்திய அணிகளிடையே நாக்பூரில் நடைபெறும் மூனறாவது டெஸ்ட் போட்டி, அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்



கிளென மெக்ராததிற்கு நூறாவது டெஸ்ட் போட்டியாகும்.

ஆஸி அணியின் வேகப்பந்து வீச்சாளர்களில் அச்சுறுத்தும் வேகப் பந்து வீச்சாளராக கிளென் மெக்ராத் திகழ்கிறார். மிகவும் துல்லியமாக இலக்குவைத்து பந்து வீசுவதானல் இவரைத்தான் உதாரணமாகக்கொள்ள வேண்டும்.

கடந்த ஒரு வருடமாக இவர் அணியில் இடம்பெறாத போதும், இந்திய டெஸ்ட் தொடரில் மிகவும் சிறப்பாக, தனது துடிப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தி வருகிறார். நாக்பூரில் தனது நூறாவது டெஸ்டை விளையாடும் மெக்ராத், அவுஸ்திரேலிய அணி சார்பில் இவ்வாறு விளையாடும எட்டாவது வீரர் ஆவார். அத்துடன் சர்வதேச ரீதியில் இந்த வகையில் 33ஆவது வீரராகின்றார்.

இதுவரை 99 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள மெக்கிராத் மொத்தம் 446 டெஸ்ட் விக்கெற்றுக்களை வீழ்த்தியுள்ளார். முன்னாள் இங்கிலாந்து அணித் தலைவர் மைக் ஆதர்ஸனை அதிக பட்சமாக 19 தடவையும், மேற்கிந்திய தீவுகளணித் தலைவர் பிறைன் லாராவை 13 தடவையம் ஆட்டமிழக்கச் செய்திருக்கிறார். இந்த வகையில் முன்னணித் துடுப்பாட்ட நட்சத்திரங்கள் அனைவருக்குமே இவர் அச்சுறுத்தும் பந்து வீச்சாளராகத் திகழ்கிறார்.

தனது நூறாவது டெஸ்டை விளையாடுவது தொடர்பாக மெக்ராத் கூறும்போது "நூறாவது டெஸ்டை விளையாடுவது மகிழ்ச்சியைத் தருகின்ற அதேவேளை, இப் போட்டியில் 10 விக்கெற்றுக்களை என்னால் கைப்பற்ற முடிந்தால் என் கிரிக்கெற் வாழ்வில் உன்னதமான போட்டியாக இது அமையும்" என்றார். அத்துடன் "சச்சின், லாரா ஆகியோருக்கு எதிராக சிறப்பாக பந்து வீசியபோதும் அவர்கள் திறமையாகவே ஆடியுள்ளார்கள்.

ஒரு போட்டியில் லக்ஷ்மனும் ராகுல் டிராவிட்டும் நாள் முழுவதும் களத்தில் நின்று துடுப்பெடுத்தாடியதை என்னால் என்றுமே மறக்க முடியாது" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-7)

# ஷெவாக்கின் மைத்துனர் கடத்தல் 2 கோடி கப்பம் கேட்டு மிரட்டல்

இந்திய கிறிக்கெற் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வீரேந்திர ஷேவாக்கின் மைத்துனர்கள் இருவரை மர்மக் கும்பல் ஒன்று கடத்தியுள்ளது.

ஷெவாக்கின் மாமாவின் புதல்வர்களான பிரசாத்ரானா, சந்தீப் ரானா ஆகிய இருவரும் விளம்பரப் படம் தொடர்பாக கடந்த 21ஆம திகதி மும்பாய் சென்ற போது, இனந் தெரியாத கும்பலொன்று அவர்களைக கடத்திச் சென்றுள்ளது.

இவர்களை விடுவிக்க வேண்டுமாயின் 2 கோடி ரூபாவை கப்பமாகச் செலுத்த வேண்டுமெனத் தொலைபேசி மூலம் அக்குழுவால மிரட்டலும் விடுக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மும்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஷெவாக்கின் தந்தையும் அவரது மாமாவும் ஒன்றாக இணைந்து வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-7)

# நாக்பூர் டெஸ்டில் கங்குலி, ஹர்பஜன் பங்குபற்ற வில்லை

நேற்று நாக்பூரில் ஆரம்பமான இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி பங்குபற்றவில்லை.

தசைப்பிடிப்பு காரணமாகவே அவர் இப் போட்டியில் பங்குபற்றவில்லை. அவருக்குப் பதிலாக ராகுல் டிராவிட் தலைவராக இப் போட்டியை வழிநடத்துகிறார்.

அதேவேளை, வைரஸ் காய்ச்சல காரணமாக இந்திய அணியின சுழல்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கும் இப் போட்டியில் பங்குபற்றவில்லை என தெரியவருகிறது. (ப-7)

# ஸ்போட்ஸ் ஸ்ரார் விருது பெறுகிறார் பாரா ஒலிம்பியன் லீ பியர்ஷன்

ஊனமுற்றோருக்கான பாரா ஒலிம்பிக் போட்டியில் ஆறுதடவைகள் தங்கப பதக்கத்தை வென்றவரான பிரிட்டனைச் சேர்ந்த லீ பியர்ஷன் பாரா ஒலிம்பிக்தடகள ஆண்களுக்கான சர்வதேச "ஸ்போட்ஸ் ஸ்ரார்" விருதினைப் பெற்றுள்ளார்.

ஸ்ரவொட்ஷெயர் பிராந்திய அணியின் வீரரான பியர்ஷன், கடந்த பாரா ஒலிம்பிக் போட்டியில் 3 வகைப் போட்டியில் தங்கம் வென்றதற்காகவே அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த எதென்ஸ் போட்டியில், நீச்சல் போட்டிகளில் முதல்தர சுயநீச்சல், ப்ரீ-ஸ்ரைல் மற்றும் அஞ்சல் நச்சல் போட்டிகளிலேயே



அவா தங்கப்பதக்கங்களைப் பெற்றார். (ப-7)



நேற்று முன்தினம் ஹைதரபாத்தில் ஆரம்பமான ஆசிய பட்மின்டன் சம்பியன்ஷிப் போட்டிகளை ஆந்திர முதலமைச்சர் ராஜசேகர ரெட்டி ஆரம்பித்து வைக்கும் காட்சி இது. அவர் அருகே இந்திய பட்மிட்டன் வீரர் கோசபந்தும் காணப்படுகிறார்.



பேர்லினில் நடைபெற்ற ரிதமிக் ஜிம்னாஸ்டிக் மாஸ்டர் 2004 போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கலைஞர்கள் பங்கேற்றனர். இதில் பல்வேறு வகையான போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் வெற்றி பெற்ற ரஷ்ய கலைஞி வெரா செசினா.

# செஸ் ஒலிம்பியாட் போட்டி இந்திய பெண்களணி முன்னணியில்


ஸபெயினில் உள்ள மல்லாக்கா நகரில் நடைபெறும் செஸ் ஒலிம்பியாட் தொடரில் இந்தியப் பெண்கள் அணி இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

அணமையில் நடைபெற்ற ஒன்பதாவது சுற்றுப் போட்டியில் இந்தியப் பெண்கள் அணி உக்ரைன் அணியை எதிர்த்து விளையாடியது. முதல் போட்டியில் இந்தியாவின் முன்னணி வீராங்கனையான ஹோரினேரு ஹம்பி, நதாலியா சூகோவாவை 2:1என்ற புள்ளி அடிப்படையில் வென்றார். விஜயலட்சுமி, இன்னாகோபனென்னா ஆகியோரிடையேயான போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

மூனறாவது போட்டியில் விளையாடிய துரோணவல்லி ஹரிகா, கதரினா லினோ ஆகியோரிடையேயான போட்டியும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்தியாவுடன் ரஷ்யா, அமெரிக்கா, ஹங்கேரி ஆகிய அணிகளும் தலா 17.5 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளன.

தொடர்ந்து பல வெற்றிகளைக் குவித்துவரும் சீனா 23.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (ப-7)



சுவிற்சர்லாந்தின் தலைநகர் சூரிச்சில் நடைபெற்ற சுவிஸ் கொம் செலஞ்ச் டென்னிஸ் தொடர் போட்டியில், பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய வீராங்கனை அலிசியா மோலிக் சம்பியன் பட்டத்தை வென்றார். வெற்றிக் கிண்ணத்துடன் அலிசியா தனது சக வீராங்கனை மரியா ஷரபோவாவுடன் காட்சி தருகிறார்.

விளையாட்டுச் செய்திகள்

# பாகிஸ்தான் கிரிக்கெற் அணியிலிந்து விக்கெற் காப்பாளர் மொயின் நீக்கம்

## புதிய விக்கெற் காப்பாளர் கம்ரன் அக்மல்

பாகிஸ்தான் கிரிக்கெற் அணியிலிருந்து அதன் விக்கெற் காப்பாளரும முன்னாள் அணித் தலைவருமான மொயின்கான் நீக்கப்பட்டிருக்கிறார்.

அண்மையில் நடைபெற்ற இலங்கை அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி படுதோல்வியடைந்ததை அடுத்து இவர் அணியில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.

பாகிஸ்தானின் தோல்விககு அதன் துடுப்பாட்ட வீரர்களே காரணமெனக் குற்றஞ்சாட்டியுள்ள பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம்-உல்-ஹக், விக்கெற் காப்பாளரையும் அணியிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று கூறியிருந்தார்.

அத்துடன், சகலதுறை வீரர்களாக சிலரை அணியில் சேர்ப்பது பல சந்தர்ப்பங்களில் அர்த்த மற்றதாகி விடுகிறது என்றும் கூறியுள்ளார்.

அந்தவகையில், சகலதுறை ஆடடக்காரரான மொயின்கான், அண்மைக் காலங்களில் மிகவும் மோசமாகவே விளையாடுகிறார். கடந்த 15 ஒருநாள் போட்டிகளிலும், சில டெஸ்ட் போட்டிகளிலும் அவரது ஆட்டம் மிகவும் மோஷமாக இருந்திருக்கிறது.

இதனால் புதிய விக்கெற் காப்பாளர் ஒருவருக்கு இடமளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

33 வயதாகும் மொயின் கான் இதுவரை 69டெஸ்ட் போடடிகளிலும் 219 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார். இதில் கடைசி 10 டெஸ்ட் போட்டிகளில் ஒரு செஞ்சுரியையும், ஒரு அரைச் செஞ்சுரியையும் மாத்திரமே பெற்றிருக்கிறார். அத்துடன் இறுதியாக அவர் விளையாடிய 20 ஒருநாள் போட்டிகளில் மொத்தம் 167 ஓட்டங்களையே பெற்றிருக்கிறார்.

இதேவேளை, பாகிஸ்தான் அணியின் புதிய விக்கெற் காப்பாளராக 22 வயதான கம்ரன் அக்மல் சேர்க்கப்பட்டுள்ளார். முன்னாள் விக்கெற் காப்பாளர் ராஸிக் லத்தீப்பின் பெயரும் பரிசீலிக்கப்பட்ட போதும் அக்மலுக்கே வாய்ப்பு கிடைத்துள்ளது.

அத்துடன் பந்து வீச்சாளர் முகமட்



சமி காயம காரணமாக விளையாட முடியாத நிலையில், அவருக்குப்பதிலாக இளம் வேகப்பந்து வீச்சாளர் ரியாஸ் அவ்ரிடி தனது முதலாவது டெஸ்டை விளையாட உள்ளார். (ப-7)

# பெற்றோர் பிள்ளைகளின் உறவுமுறை புரிந்துணர்வுடன் பேணப்படவேண்டும்

"தோளுக்கு மிஞ்சினாற் தோழன்" என்பது ஒரு அனுபவ மொழியாகும். பெற்றோர், பிள்ளைகளின் உறவுமுறையில் இன்றைய வாழ்க்கைப் போக்குப் பெரும போராட்டமாகவும், தீர்க்க முடியாத சிக்கல்கள், பிரச்சினைகள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது.

ஒரு காலத்தில் பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் பயந்தவர்களாகவும், பணிவுடையவர்களாகவும் மிகவும் மரியாதை கொடுப்பவர்களாகவும் எமது சமூகத்திலே வாழ்ந்தார்கள். குடுமபத்திலே மூத்த சகோதரர்கட்கு இளையவர்கள் மரியாதை கொடுத்து வாழ்ந்தார்கள்.

அந்தக் காலத்திலே நாச்சாரவீடு கட்டிக் குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் யாவரும் ஒரே வீட்டில் மிகவும் அன்புடனும், பாசப்பிணைப்புடனும் பெற்றோரைப் பேணி வாழ்ந்தார்கள். கால மாற்றங்களாலும் மக்களது மனோநிலை, சூழ்நிலைகட்கு ஏற்ப பணம், பதவி மோகங்கடகு முன்னுரிமை தந்தாலும் ஒரே வீட்டில் பல குடும்பங்கள் சேர்ந்து அந்நியோன்யமாக வாழும்நிலை மாறலானது.

சிறுவயதுக் குழந்தைகளைக் கண்டிக்கவும் அவர்களை அதட்டி வளர்க்கவும் பெற்றோர் முயற்சிகள் செய்தாலும், வளர்ந்துவரும் வாலிபப் பருவத்தில் உள்ள இளைஞர்களையோ, யுவதிகளையோ கண்டிக்கவோ, அல்லது கட்டுப்படுத்தி நல்வழிகளையோ, நற்புத்திகளையோ செல்வது இன்று முடியாத காரியமாகவுள்ளது.

இயேசுநாதர் பெற்றோரிடம் கூறுகின்றார், குழந்தைகளைக கோபப்படுத்துவதால் அவர்கள் பலம் இழந்து போகின்றார்கள. பிள்ளைகளைக் கோபப் படுத்தாது இருங்கள்.

பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி அவர்களை வளருங்கள். பிளளைகளுக்கு மனோசக்தியே முக்கியமானது.

தலைக்குமேற் வளர்ந்து விட்டால் சிறு குழந்தைகளைக் கண்டிப்பது போல் கண்டிக்கக் கூடாது. நண்பர்களைப்போல நடாத்தவேண்டும். கண்ணியமாகக் கண்டிக்கத் தெரிந்து கொள்ளவேண்டும். பழகிக் கொள்ளவேண்டும். கண்டபடி மிருகங்களோடு ஒப்பிட்டுப் பேசினாலோ, பலருக்கு முன் அதடடினாலோ அவர்கள் மனநிலை கடுமையாகப் பாதிக்கப்படும். எனவே பெற்றோர்கள் பிள்ளைகளை அன்பான வார்த்தைகளால் கண்டிக்கவேண்டும். இறைவனிடம் பிள்ளைகளின் நலங்கட்காகப் பிரார்த்திக்க வேண்டும். அயல் வீட்டாரிடமோ, உறவினர்களிடமோ, பிள்ளைகளின் தவறுகள், குறைகுற்றங்களைச் சுட்டிக்காட்டுவதும் பேசுவதும் தவிர்க்கப்பட வேணடும். இளவயதுப் பிள்ளைகள் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி அவர்களைப் பெற்றோர் அன்புடன் சமநிலையில் நடத்த வேண்டும்.

ஒரு வீட்டிலே பல பிள்ளைகள் இருக்கும் போது அவர்களை ஒரே மாதிரியாகவே வளர்க்க வேண்டும். அவர்கள் எல்லோருக்கும் சமவிலையிலேயே அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். சிறுவயது முதலே நல்ல பயிற்சிகளைப் பயிற்றுவிக்கவும், பழகிக் கொள்ளவும் செய்ய வேண்டும்.

பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்தே தனியே படுக்க வைக்கவும், தனியாகவே உறங்கவும் பழக்கப்படுத்தல் வேண்டும அப்படிப் பழக்கினால எதிர்காலத்தில் பல பிரச்சினைகளை இது தீர்ப்பதாகவும் அமையும்.

பிள்ளைகள் வெறுப்படையும் விதமாகப் பெற்றோர்கள் நடந்து கொள்ளக் கூடாது. பிள்ளைகள் மனதினாலோ, உடம்பினாலோ பலவீனமடையப் பெற்றோர்கள் இடம் தராதிருப்பது அவசியம். பெற்றோர் தம் அனுபவத்தாலும், முதுமையாலும், பிள்ளைகட்கு நல்லறிவு புகட்டுபவராகவும், நல்வழிகாட்டுபவராகவும், பிள்ளைகளின் மனம் அறிந்து நடந்து கொள்ளக் கூடியவராகவும் இருந்தால் பெற்றோர் பிள்ளைகளின் பாச உறவும் நீடிக்கும், வாழ்க்கையும் வளமாக அமைந்துவிடும்.

இன்று பெற்றோர், பிள்ளைகளின் போக்குகளில் சமூகம ஏற்கமுடியாத பிரச்சினைகள் மலிந்த கிடப்பதற்குக் காரணம் பெற்றோர் பிள்ளைகளை நடாத்தும் விதத்தில் உள்ள தவறுகளும், பிள்ளைகளின் 'இளம் கன்று பயமறியாது' என்ற விதத்தில் எதிலும் பயமோ, பணிவோ இன்றி நடந்து கொள்ளும் செயற்பாடுகளுமே ஆகும்.

மேலும் தற்காலச் சூழலும், பொழுது போக்குச் சாதனங்களும், வெளிநாட்டுத் தொடர்புகளும் எங்களுடைய சமூகத்தில் உள்ள உயர்ந்த நற்பண்புகள், கலாசாரங்கட்கு ஒவ்வாததாய் இருக்க, அவற்றை வாழ்ந்து கண்ட பெரியோரும், வாழும் இளசுகளும் நல்து கெட்டது புரியாது நாடித்தேடி நலம் கெடுவதாகும்.

**கு.தியாகராஜ சர்மா**

ஆகையால் எமது மக்களுடைய நற்பண்புகள் நிறைந்த பெற்றோர்-பிள்ளைகள் அன்பும், பாசவுணர்வும் இறுகவும் நாம் எல்லோரும் நல்வழி நாடிடுவோம். □

## சிரமதானம்

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லப் பகுதியில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இச் சிரமதானப் பணிகளில் தேசிய எழுச்சிப் பேரவையினர், மாணவர்கள், பொதுமக்கள் எனப பலரும் ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை, நவம்பர் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை மிகச்சிறப்பான முறையில் மாவீரர் வாரத்தை அனுஷ்டிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.(க-43)

## சாவகச்சேரி நகர் வர்த்தகர்களுக்கு

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, சாவகச்சேரி நகரிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் யாவற்றையும் சனி, ஞாயிறு தினங்களில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக திறந்திருக்குமாறு சாவகச்சேரி வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

இதன் படி இவ்வார இறுதி சனி, ஞாயிறு தினங்களிலும், அடுத்துவரும் சனி, ஞாயிறு தினங்களிலும் வர்த்தக நிறுவனங்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் எஸ்.அருளா

# மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி நேற்று விஞ்ஞான பீடத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விஞ்ஞான பீடததினரின் ஏற்பாட்டில் நடத்தப்படும் மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி நேற்றுக் காலை 9.00 மணிக்கு விஞ்ஞான பீடத்தில் ஆரம்பமானது.

இவ் ஆரம்பவிழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கே.குணரட்ணமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், விஞ்ஞானத்துறைப் பீடாதிபதி இ.குமாரவடிவேல் ஆகியோரும் மற்றும் யாழ்.வலயக் கல்விப பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ.பல்கலைக்கழக பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் இணைப்பாளர் கண்ணன் மற்றும் கல்வி மான்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இக் கண்காட்சியில் க.பொ.த (உ/த), க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கு ஏற்ற வகையில் தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதீகவியல், கணனி விஞ்ஞானம், கணித - புள்ளிவிபரவியல் மற்றும மீன் பிடியியல் சம்பந்தமான விடயங்கள காட்சிப்படுத்தப்பட்டு பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன. (ற-19)




யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் 30 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி நேற்று ஆரம்ப மானது. இவ் ஆரம்ப விழாவில் கலந்துகொண்டவர்களையும் மற்றும் காட்சிப்பொருட்களையும் படங்களில் காணலாம். (படங்கள் : ஞா.ஐங்கரன்)

## இன்று ஒரு தகவல்

# மூச்சும் குணமும்

ஒரு மனிதன் எப்படி மூச்சுவிடுகிறான் என்பதை வைத்தே அவனது குணம் என்னவென்பதைக் கூறிவிடலாமாம். நாம் விடும் மூச்சுக்கும் நமது குணத்துககும் சம்பந்தம் உண்டு. நியூயோர்க் பல்கலைக்கழகத்திலுள்ள மனோதத்துவ நிபுணர் ஒருவர் இப்படிக் கூறியுள்ளார். வெறுமனே கூறிவிடவில்லை. 160 பேரை சோதனை செய்து பார்த்துவிட்டு அதன் பின்பு சொல்லியிருக்கிறார்.

ஒவ்வொருவரும் எப்படி மூச்சுவிடுகின்றனர் என்று பார்த்துவிட்டு அவர்களுடைய குணத்தையும் கவனித்திருக்கிறார். அவர் ஆராய்ச்சி செய்து என்ன கண்டுபிடித்தார் தெரியுமா? மெதுவாக அதேசமயத்தில் மிகவும் நீளமாக மூச்சு இழுத்துவிடுபவர்கள் பலபேர் இருப்பார்கள். அவர்களின் குணம் எபபடி இருக்கும் தெரியுமா? அவர்களுக்கு மிகுந்த மனோதிடம் உண்டு. உறுதியான எண்ணம் உண்டு. மிகவும் தைரியசாலியாக இருப்பார்கள். அவர்களுக்கு புத்தி, உடல் இவை இரணடுமே சுறுசுறுப்பாக இருக்கும். தங்களைக் கட்டுபபடுத்திக் கொள்வதிலும் இவர்கள் மிகுந்த கெட்டிக்காரர்கள். புதிதாக எதையும் செய்து பார்ப்பதில் ஆர்வம் உள்ளவர்கள்.

இன்னொரு ரகம் எப்படி தெரியுமா? மிகவும் மேம்போக்காக அதேநேரத்தில் அவசரம் அவசரமாக மூச்சு இழுத்துவிடுவார்கள். இவர்களின் குணம் எப்படி தெரியுமா? அது வேறுமாதிரியாக இருக்கும். இவர்கள் மிகவும் பயந்தவர்கள். வெட்கப்படுபவர்கள. கூச்ச சுபாவம் உண்டு.... இவர்களுக்கு தன்னம்பிக்கை குறைவாக இருக்கும். எப்போதும் அடுத்தவர்களையே நம்பியிருப்பார்கள்.

இவற்றையெல்லாம் சோதித்துப் பார்த்துவிட்டுத்தான் அந்த மனோதத்துவ நிபுணர் ஆளுமைக்கும் மூச்சுவிடும் முறைக்கும் தொடர்பு உண்டு என முடிவு செய்தார். நமது ஊரில் சில சாமியார்கள உயிருடன் பூமிக்கு அடியில் இருந்துவிட்டு சில நாட்களின் பின் வெளியே வருவார்கள்.

மும்பாயில் ஒரு சுவாமி பூமியில் ஒரு குழி வெட்டி உள்ளே போய்விட்டார். தண்ணீருமில்லை ஆகாரமும் இல்லை. ஆறுகள் பூமிக்குள் இருந்துவிட்டு அதன பின் மேலே வந்தார். பலரும் இதை நேரில் பார்த்தனர். இது மந்திரமா? தந்திரமா? இதற்கு விஞ்ஞான பூர்வமான விளக்கம் என்ன?

இதை சில விஞ்ஞானிகள் சோதனை செய்து பார்த்தனர். மும்பாயில் ஆர்.ஜே. விக்கல் என்ற ஆராய்ச்சியாளர் இதைப்பற்றி பரிசோதனை செயது பார்த்தார். டெல்லியில் கூட இதைப் பற்றி ஓர் ஆராயச்சி நடந்தது. ஆராய்ச்சி செய்தவர் பி. கே. ஆனந்ராமானந்த யோகி என்ற ஒரு சுவாமியை வைதது இதைச் செய்தார். அந்த யோகியை என்ன செய்தார்கள் தெரியுமா? ஒரு பெட்டியில் அடைத்து வைதது பூமிக்கு அடியில் புதைத்து வைத்துவிட்டார்கள். பத்துமணித்தியாலம் அவர் தொடர்ந்து உள்ளே இருந்தார்.

அப்போது அவருடைய உடலில் ஏற்பட்ட மாறுதலை எல்லாம் வெளியில் இருந்தே கருவிகள் மூலமாக கணக்கெடுத்தார்கள். அதையெல்லாம் வைத்துப் பார்த்ததன்பின்பு தான் புரிந்தது இது மந்திரமும் இல்லை தந்திரமும் இல்லை மனித எந்திரம தான் இதற்குக் காரணம் என்று புரிந்தது.

அதாவது நமது உடல் இருக்கிறதே அது சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் தன்னைமாற்றிக் கொளளுமாம். திடீரென்று இருட்டுக்குள் போனால் கொஞ்ச நேரத்தில் கண்ணுக்கு பார்க்கும் சக்தி வந்து விடுமல்லவா? அது போல பூமிக்கு அடியில் இருக்கும் போது குறைந்தளவு பிராண வாயுவை வைத்துக் கொண்டே உடல் அனுசரித்துப் போகும் பழக்கம தான் இதற்கு வேண்டும். வேறு ஒன்றுமில்லை.

நான்... வழக்கம் போல இந்தத் தகவலையும் ஏற்கனவே ஒருவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அதற்கு அவர் "என்ன சார்... பத்துமணிநேரம் பூமிக்கு அடியில் எந்த ஆகாரமும் இல்லாமல் இருப்பது ஒரு பெரிய சாதனையா? நான் பத்து வருடமாக கிட் டத் தட்ட அதே நிலையில் இருந்து ஒரு பெரிய சாதனை செய்து கொண்டு வருகின்றேன்" என்றார். "என்ன சொல்கிறீர்கள்?" என்றேன். 'என் மனைவியுடன் குடும்பம் நடத்திக்கொண்டு வருகிறேனே அதைச் சொன்னேன்'' என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# வடக்கு-கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கு இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுவது அவசியம்

## ஜோசப் எம்.பி. வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டின் அரசியல் அமைப்பை மாற்றம் செய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.



ஆனால், இதற்கு முன்னர் விடுதலைப் புலிகளால் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையினை வழங்க முன்வரவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இத்தீர்மானம் குறித்து ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையினை முதலில் வழங்கவேண்டும். அதன் பின்னர் இறுதித்தீர்வு குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்தி ஓர் இணக்கப்பாட்டினைக் கண்டபின்னர் அரசியல் அமைப்பினைமாற்ற நடவடிக்கை எடுக்கலாம். அதில் எமக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை.

அரசியல் அமைப்பினை மாற்றியமைப்பதனால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினை ஜனாதிபதி எப்படியாவது பெற்றுக்கொள்ளவேண்டும்.

அத்துடன், சர்வஜன வாக்கெடுப்பினையும் நடாத்தவேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுப்போயுள்ள இந்நிலையில், அரசியல் அமைப்பினை மாற்றும் நடவடிக்கையினை விட்டுவிட்டு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையினை வழங்க ஜனாதிபதி முன்வரவேண்டும்.

இரு தசாப்தகால யுத்தத்தினால் சேதமடைந்த வடக்கு-கிழக்கை மீளக்கட்டியெழுப்பவும் உடனடி மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளவும் வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வழங்குவது அவசியமான ஒரு விடயமாகும்.

இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு என்பது உடனடியாகக் காணப்படமுடியாததாகும். எனவே, இடைக்கால தன்னாட்சி அதிகார சபையினை வழங்கிய பின்னர் இறுதித்தீர்வு குறித்துப் பேசவேண்டும். இதில் இணக்கப்பாடு கண்ட பின்னர் அரசியல் அமைப்பினை மாற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் அரசியல் அமைப்பினை ஜனாதிபதி மாற்றியமைக்க முற்பட்டால் எத்தகைய முடிவினை எடுப்பது என்பது குறித்து கூட்டமைப்பு கூடிமுடிவு செய்யும் எனவும் குறிப்பிட்டார். (ந-121)

# கலாசாரச் சீரழிவுகளைத் தடுப்பதற்கு சனசமூக நிலையங்களின் பங்களிப்பு அவசியம்

## கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து

துன்னாலை கோவிற்கடவை சனசமூக நிலைய வெளிவிழா பரிசளிப்பு வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்தார்.



அவர் மேலும் உரையாற்றுகையில், எங்கெங்கு சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள் செயற்படவில்லையோ அங்கெல்லாம் சமூகச சீர்கேடுகளும் கலாசார துஷ்பிரயோகமும் கோஷ்டி மோதலகளும் இடம்பெறுகின்றன.

சுருக்கமாகச் சொன்னால் ஓர் கிராமத்து மக்கள் ஓர் கட்டுக்கோப்பினுள் இருப்பார்களேயானால் அவர்கள் ஒற்றுமையான ஓர் சிறந்த இளம் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

இநத வகையில் இக்கோவிற்கடவை சனசமூக நிலையத்தினரும் இப்பகுதி மக்களும் பாராட்டப்படவேண்டியவர்கள். இப்பிரதேச மண் பல புத்திஜீவிகளையும் அறிஞர்களையும் உருவாக்கியது மட்டுமன்றி போராட்ட வரலாற்றில் கரும்புலிப் படையின் முதற்கரும்புலி கப்டன் மில்லரையும் உருவாக்கிய பெருமையையும் பெற்றுள்ளது.

இனறு எமது போராட்டம் மதிக்கப்படுவதற்குக் காரணம் தமிழ் மக்கள அனைவரும் ஒன்று திரண்டு தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்த உறுதிபூண்டு நிற்கின்றமையேயாகும்.

தமிழனத்தை விற்று சுயலாபம் கருதிய தமிழக் குழுக்கள் இன்று பாராளுமன்றத்தில ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் அனைவரும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்பதை எடுத்துக்காட்டி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச்செய்துள்ளனர் என்றார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான இ. நேசன், எம்.கே.சிவாஜிலிங்கம், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ப-101)

## இராசிபலன்

**27.10.2004**

**(ஐப்பசி 11, புதன்கிழமை)**

**சதுர்த்தசி மு.ப. 08.51 மணிவரை**

**இராகுகாலம் 12.03- 1.33 மணிவரை**

**சுபநேரம் 4.33-6.03 மணிவரை**

**கேதார கௌரி விரதம் 5ஆம் நாள்**

- **மேடம்** போசன நன்மை, நல்ல முயற்சி, ஜனவசியம், உற்சாகம்.
- **இடபம்** தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு எடுத்த கருமங்கள் கைகூடும், கீர்த்தி.
- **மிதுனம்** அதிகபிரயாசை, பிறர் உதவி, முயற்சி கைகூடும், சுபநிகழ்வு.
- **கடகம்** கடின உழைப்பு, தூரதேசச் செய்தி, நண்பர்கள் சந்திப்பு, சுப நிகழ்வு.
- **சிங்கம்** உடல் உழைப்பு, புதிய திட்டமிடல், வீண்பயம், கட்டுப்பாடு.
- **கன்னி** வீண்தொல்லை, திருடர்பயம், காரிய தடங்கல், பணத்தட்டுப்பாடு.
- **துலாம்** திடீர் பயணம், பணவருவாய், நல்ல வரவேற்பு, காரிய அனுகூலம்.
- **விருச்சிகம்** சுகவாழ்வு, எடுத்த கருமங்கள் கைகூடும், போசன நன்மை, திடீர் பயணம்.
- **தனுசு** குடும்பக்கவலை, காரிய தாமதம், உடல்நலக் குறைவு, தொழில் சிந்தை.
- **மகரம்** பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், முயற்சிதாமதம், விரும்பாத உறவு.
- **கும்பம்** இனிய சம்பவம், வாக்கு மேன்மை, பணவரவு, காரிய சித்தி.
- **மீனம்** மாதர் நட்பு, அதிக செலவு, அதிக வார்த்தை, காரிய தாமதம்.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

**- வளவன்**

# கடலுணவு பதனிடும் ஸ்தாபனம் வேலணையில் இன்று திறப்பு

(திருநெல்வேலி)

யாழ். தீவகத்தில் உள்ள வேலணைப் பகுதியில் உலக உணவு ஸ்தாபனத்தினர் 15 மில்லியன் ரூபா செலவில் கடலுணவு பதனிடும் நிலையம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இநத நிலையம் இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் பெரிதும் செல்வாக்கைச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பகுதியில் சிறந்த கடலுணவு பதனிடும் நிலையம் இதுவரையும இல்லாதமையினால் இப்பகுதி மீனவர்கள் தாம பிடிக்கும் கடலுணவுகளை சந்தைப்படுத்தி சிறந்த இலாபம் ஈட்ட முடியாத நிலையில் காணப்பட்டனர்.

இதனால் இப்பகுதி மீனவர் எதிர்கொள்ளும் பின்னடைவுகளைக் கவனத்தில் கொண்டு அமைக்கப்பட்ட இக் கடலுணவு பதனிடும் நிலையம் இன்று முப. 10.00 மணிக்கு வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது. (க-43)

## வட– கிழக்கை அபிவிருத்தி செய்ய

# போதிய தரவுகள் இல்லையென ஐ. நா. அலுவலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொளளுவதற்கு போதிய தரவுகள் தம்மிடம் இல்லையென ஐககிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகம் தெரிவித்துள்ளது.

தெற்காசிய நாடுகளோடு ஒப்பிடும் போது அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கான தேவையின் அடிப்படையில் இலங்கை முன்னணியில் இருக்கின்றது.

எவ்வாறாயினும் அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றபோதும் இலங்கையின் வடக்கு- கிழக்கு பகுதிகள் தொடர்பான தரவுகள் இல்லாமை ஒரு குறைபாடாகவே இருக்கின்றது என அவ்வலுவலகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-121)

நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் - குறள்

வலம்புரி

# நோய்த்தொற்று வேகமாக பரவும் மாரிகாலம்

மாரிகாலம் ஆரம்பித்துவிட்டது. இக்காலத்திலேயே நோய்த் தொற்றுக்கள் மிகவும் வேகமாகப் பரவுகின்றது. வெள்ளங்களின் தேக்கம், குடிநீர் அசுத்தமடைதல் போன்ற பல்வேறு காரணங்களினால் நோய்த் தொற்றுக்கள் வேகமாகப் பரவும் அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளது.

இதன்விளைவாக உயிரிழப்புக்கள் ஏற்படும் அபாயத்தையும் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ளனர். யுத்தத்தால் பாதிப்படைந்துள்ள யாழ்ப்பாணத்தில் மக்களின் போசாக்கு நிலையானது மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேவேளை போதிய சுகாதார வசதிகள், குடிநீர்த் தேவைகள் இன்னமும் பூரணமடையவில்லை. வடிகால்கள் உடைவுற்று நீர்தேங்கி நின்று நோயைப் பரப்பும் இடமாகவுள்ளது. இவ்வாறு யுத்தத்தால் சீரழிந்துபோயுள்ள யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி வேலைகள் இடம்பெறாமையாலும், இடம் பெயர்ந்த மக்கள் அகதிமுகாம்களிலும், நலநோன்பு நிலையங்களிலும் வாழ்வதாலும் நோய்த்தாக்கம் மிகமோசமாகவுள்ளது.

இந்நிலையிலேயே யாழ். குடாநாட்டு மக்கள் அடிக்கடி தொற்றுநோய்களின் தாக்கத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

இதனால் அவர்களின் உடல்நலம், வாழ்க்கைத் தரம் என்பன வீழ்ச்சிப் பாதையில் செல்கின்றது. போசாக்கான உணவின்றி மந்தபோசனை நிலையிலுள்ள குழந்தைகள் இத் தொற்றுநோய்க்கு ஆளாகுவதால் அவர்கள் மரணிக்கவோ அன்றி வலுவிழந்து பிறரில் தங்கிவாழும் அபாயநிலைக்கோ ஆளாகின்றனர்.

இத்தகைய நிலைமை நீடிக்குமானால் அதனுடைய விளைவு பாரதூரமானதாக அமையும். எனவே இது விடயத்தில் அரச அமைப்புக்களும், பொதுமக்களும் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு நோய்த்தொற்றுகளைத் தடுப்பதற்கு முன்வரவேண்டும்.

காய்ச்சல் உள்ளிட்ட தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுப்பதில் தனிநபர் சுத்தம் கடைப்பிடிப்பது மிகவும் அவசியமானதாகும். தனிநபர் சுத்தத்தைப் பேணத் தவறுவதிலேயே தொற்றுநோய்களின் தாக்கம் மிகவேகமாகப் பரவுகிறது.

குறிப்பாக மலகூட பாவனை, கொதித்தாறிய நீர் பருகல், உணவுச் சுத்தம் என்பவற்றில் கண்ணும் கருத்துமாக இருப்பதன் மூலம் தொற்றுக்களைக் கட்டுப்படுத்தலாம். எனினும் இது விடயத்தில் மக்கள் எந்தளவு தூரம் விழிப்படைந்துள்ளார்கள் - அவர்களை விழிப்படைய வைப்பதில் சுகாதார திணைக்களங்கள் எந்தளவு தூரம் வெற்றி கண்டுள்ளன என்பது ஆராயப்படவேண்டியதொன்றாகும்.

தொற்றுநோய்களைத் தடுப்பதில் மேற்கூறப்பட்ட விடயங்களில் உணவுச் சுத்தம் என்பது மிகவும் முக்கியமான விடயமாகும். அசுத்தமான - பழுதடைந்த உணவுப் பண்டங்களை உட்கொள்வதனால் காய்ச்சல் போன்ற தொற்றுநோய்களும், குடல் சார்ந்த தொற்றுநோய்களும் ஏற்படுகின்றன.

இங்கு உணவுச் சுத்தம் என்பது வீடுகளில் கவனிக்கப்படுகின்றபோதிலும், உணவுச்சாலைகளில் உணவுச் சுத்தம் பேணுவது மிகவும் குறைவாகவே உள்ளது.

உணவுச்சாலைகள் நோய்த் தொற்றுக்களைப் பரப்புவதில் காத்திரமான பங்களிப்பை ஆற்றுகின்றன என்ற விடயங்கள் "நோய்த் தொற்று விசாரணைகள் மூலம்" அறியமுடிகின்றது.

எனவே, உணவுச்சாலை வைத்திருப்பவர்கள் தாம் செய்யும் உயர்ந்த சேவையுடன் சுத்தமான உணவை விநியோகிப்பதையும் உறுதிசெய்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு அனைத்துத் தரப்பும் "சுத்தம்" என்ற விடயத்தில் அக்கறையோடு செயற்படுமாக இருந்தால் தொற்றுநோய்களைத் தடுப்பதில் பெரும் சிரமம் இருக்க நியாயமில்லை.

# சமாதானப் பேச்சை ஆரம்பிப்பது தொடர்பில் சர்வதேச அழுத்தம் அதிகரிக்குமென எதிர்பார்ப்பு

(கொழும்பு)

தடைப்பட்டுள்ள இலங்கையின் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கச் செய்யும் வகையில் இலங்கை அரசாங்கத்தின் மீதும் விடுதலைப்புலிகள் மீதும் சர்வதேச அழுத்தங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சமாதான முயற்சிகளின் இணக்கப்பாட்டாளர்களாகச் செயற்பட்டு வரும் நோர்வே அரசாங்கமும் இலங்கைக்கான நிதியுதவிகளை பெருமளவில் வழங்கிவரும் முக்கிய நாடான ஜப்பானும் சமாதான நடவடிக்கைகளை ஆரம்பிக்கச் செய்யும் முயற்சிகளில் அதிகளவு அக்கறை செலுத்தவுள்ளதாக தற்போது எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு இன்று வருகை தரவுள்ள ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளையும் அரசாங்கத்தையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளார்.

இதேவேளை, அடுத்த மாதம் 2ஆம் திகதி அமெரிக்காவில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின பின்னர் இலங்கை வரவுள்ள அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சாட் ஆர்மிடேச் இவ்விவகாரம் தொடர்பாக கவனம் செலுத்துவாா என இராஜதந்திர வட்டாரங்கள் தரப்பில் பேசப்படுகின்றன.

கடந்த 2002ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த உடனபடிக்கையின் பின்னர் நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதில் றிச்சாட் ஆர்மிடேச் அதிக கரிசனை காட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகளுடன் அடுத்த மாதத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவிருப்பதாக அரசா[illegible]றி வருகின்ற நிலையில்,சமாதான முன்னெடுப்புகள் [illegible]க வெளிநாடுகளில் அழுத்தங்கள் அண்மைக்கால[illegible]அதிகரித்து வருகின்றன.

பேச்சுவா[illegible]தை[illegible]ளை மீண்டும் ஆரம்பிக்கும் வகையில், இடைககால [illegible]வாகசபை குறித்த மாற்று யோசனை ஒன்றை சமர்ப்பிக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டபோதிலும், இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையல் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டால் மட்டுமே தாங்கள் அதில் கலந்து கொள்ள தயார் என விடுதலைப் புலிகள அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-121)

# புரிந்துணர்வு உடன்படிக்கை விடயத்தில் மிகுந்த அக்கறையாகவுள்ளது இந்தியா

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை சீர்குலையாமல் இருப்பது உறுதிப்படுத்தவேண்டும் என இந்தியா உறுதியாக இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நேரடியாக ஈடுபாடு எதனையும் இந்தியா காட்டாத போதும், யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதில் அந்நாடு மிகுந்த அக்கறையுடன் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது இந்திய தலைவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் சிறந்த பயனளித்திருப்பதாக மேலும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை வகித்த காலத்தில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையே தற்பொழுதும் நடைமுறையில் இருக்கின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரும், விடுதலைப் புலிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி நடந்து கொண்ட பாணியிலேயே தொடர்ந்தும் செயற்படவேண்டியிருக்கின்றது என்ற ஜதார்த்தத்தை இந்தியத் தரப்பினர் நன்கு விளங்கிக்கொண்டுள்ளனர்.

ரணிலுக்கும புதுடில்லிக்கும் இடையே ஏற்கனவே புரிந்துணர்வு இருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இறுதியாக அவரின் இந்திய விஜயத்தினால் இலங்கையின சமாதான முயற்சிகள விவகாரத்தல் எத்தகைய அணுகுமுறையினைக் கடைப்பிடிக்க வேண்டும் என கூடுதலான விளக்கப்பாடு ஒன்றை இந்தியத் தரப்பினர் பெற்றுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளை சீண்டும் வகையிலான அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்காமல் இருப்பது அவசியம் என்பதே தனது அபிப்பிராயம் என ரணில் இந்தியத் தலைவர்களுக்குத் தெரிவித்துள்ளார் எனவும் புதுடில்லித் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

(ந-121)

# நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

கலாநிதி ம. இரகுநாதனின் "ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்" மற்றும் கலாநிதி சி. செல்வரஞ்சிதத்தின் "பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை நூல்களும் மதிப்பீடும்" நூல் அறிமுகவிழா நாளை வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழவில், தமிழ்த்துறை விரிவுரையாளர் க.கருந்தாகரன் வரவேற்புரையையும் , துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோர் வாழ்த்துரையையும் வழங்கவுள்ளனர்.

அத்துடன், நூல் அறிமுக உரைகளை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு மற்றும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரும் நூல் வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதனும் வழங்கவுள்ளனர். (ந)



கோணடாவில் பழனி ஆண்டவர் ஆலயத்தில் திருடியோரை நேற்று அதிகாலை மடக்கிப் பிடித்த கோப்பாய் பொலிஸார் அவர்களால் திருடப்பட்ட ஐம்பொன் விக்கிரகங்களையும் மீட்டெடுத்தனர். இவவாறு மீட்கப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான விக்கிரகங்களுடன் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தலைமையிலான குழுவைப் படத்தில் காணலாம். (படங்கள்: கோண்டாவில் செய்தியாளர்)

# ஊழல் மோசடியில் ஈடுபட்ட அமைச்சர்களின் விபரங்களை ஜே.வி.பி இவ்வாரம் சமர்ப்பிக்கும்

(கொழும்பு)

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுவரும் அரசாங்கம் அமைச்சாகள் தொடர்பான அறிக்கை ஒன்றினை அரசாங்கத்தின் அங்கத்துவக் கட்சியான ஜே.வி.பி.இவ்வாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கவுள்ளது.

இதனை ஜே.வி.பியின் அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கவுள்ளார்.

அண்மையில் அனுரகுமார திஸநாயக்க ஆயிரம் குளங்கள் புனரமைப்புத் திட்டத்தில் குறை இருப்பதாகத் தெரிவித்ததன் பின்னரே இவ்வறிக்கையினை ஜே.வி.பி: அனுப்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-121)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

கடவுள் உள்ள இடத்தில் வேறு எதுவும் இல்லை. உலகம் உள்ள இடத்தில் கடவுள் இல்லை. ஒளியும் இருளும் போல் இவை இரண்டும் ஒருபோதும் இணைவதில்லை. கிறிஸ்தவ மதத்திலிருந்தும் போதகரின் வாழ்க்கையிலிருந்தும் நான் அறிந்து கொண்டது இதுதான். இதுதானே பௌத்த மதம்? இதுதானே இந்து மதம்? எல்லா முனிவர்களும் ஆச்சாரியர்களும் போதிப்பது இதுதானே.

சுவாமி விவேகானந்தர்

## கோண்டாவில் கிழக்கில் உள்ள

# பழனி ஆண்டவர் கோவிலில் திருடிய கும்பலை கோப்பாய் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்!

(கோண்டாவில்)

கோண்டாவில் பழனி ஆண்டவர் ஆலயத்தை உடைத்துத் திருடிய திருடர்களை கோப்பாய் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். அவர்கள் வசம் இருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியுடைய ஐம்பொன்னினாலான விக்கிரகங்களையும் மீட்டுள்ளனர்.

திருட்டு மற்றும் வன்செயல்களைத் தடுக்கும் நோக்கில் கோப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி சிறிசெல்வத்தின் நடவடிக்கைக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின்போதே இத்திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை மடக்கிப் பிடித்ததாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரால் பிடிக்கப்பட்ட இரு திருடர்களில் ஒருவர் தப்பியோடியுள்ளார். மற்றைய நபர் கைதுசெய்யப்பட்டதுடன், அவர் வசமிருந்த விக்கிரகங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதன்போது கைதுசெய்யப்பட்ட நபர்மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, தான் சம்பந்தப்பட்ட திருடர் கும்பல் கோவில்களிலுள்ள பெறுமதிவாய்ந்த விக்கிரங்களைத் திருடி முஸ்லிம் வியாபாரி ஒருவருக்கு வழங்குவதாகவும், அதற்காக அவர் ஒரு விக்கிரகத்துக்கு நூறு ரூபா வரையான பணத்தை சன்மானமாகத் தருவதாகவும் தெரிவித்தார்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த கோப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி சிறிசெல்வம், திருட்டுச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தி அச்சமற்ற வாழ்வை மக்களுக்கு ஏற்படுத்த தாம் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும், சம்பவத்துடன் தொடர்புடைய மற்றவரும் கைதுசெய்யப்படும் பட்சத்தில் யாழ். குடாநாட்டிலுள்ள பல கோவில்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் வெளிச்சத்துக்கு வரும் எனவும் தெரிவித்தார். (ப-130)

### சுவிஸ் பிரஜை...

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற இந்நிகழ்வு குறித்து முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்மூலம் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடன் இனங்கண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-121)

### லொறி - ஹயஸ்...

சேர்ந்தவர்களான அருணகிரிநாதன் தேவரஞ்சன் (வயது 35), தே.கிருஷ்ணகுமாரி (வயது 28), தே.விதுஷன் (வயது 12), ருகிஸ்ஸன் (வயது 07) மற்றும் நாகலிங்கம் பூரணம் (வயது 66) மாத்தளை, சுப்பிரமணியம் கோமளவள்ளி (வயது 60) புங்குடுதீவு, நடேஸ்வரபிள்ளை இராஜேஸ்வரி (வயது 64) புங்குடுதீவு, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பூவிலிங்கம் சந்திரகுமார் (வயது 46) கொக்குவில், சந்திரகுமார் விக்னேஸ்வரி (வயது 46), சந்திரகுமார் கிருபராஜா (வயது 07) மற்றும் மாரிமுத்து சிவராஜா (வயது 50) கல்வியங்காடு.

இதேவேளை இவ்விரு வாகனங்களும் விபத்துக்குள்ளானபோது ஹயஸ் வானுக்குப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதாகவும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களும் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது. (ச-05-47)

### வல்லைப்...

பருத்தித்துறையிலிருந்து பயணிகள் போக்குவரத்துச் சேவையை மேற் கொண்ட வாகனங்களும் பாலம் சேதமடைந்த பகுதிவரை தமது சேவையை மேற்கொண்டன. இதனால் பயணிகள் இரண்டு வாகனங்களில் மாறிமாறி ஏறிச் செல்லவேண்டி ஏற்பட்டது. இதற்கிடையில் லொறியில் இருந்த மணலை அகற்றி லொறி அங்கிருந்து மீட்கப்பட்டு பாதை செப்பனிடப்பட்டது. இதனால் சில மணிநேரத்தின்பின் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

கடந்த பல வருடங்களாக சேதமடைந்து காணப்படும் வல்லைப் பாலம் புனரமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-101-43)

### இனப்பிரச்சினை...

சிங்கின் அரசாங்கமும் உறுதியாகவுள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக இந்தியாவின் கொள்கைகள் பற்றி அங்குள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாது என்றார்.

நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் ஜே.எம். லொக்குபண்டார, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டனர்.(க)

# ஜி.ரி.சற் குழு இன்று யாழ். வருகின்றது

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி றோலன்ட் ஸ்ரியூரிர் தலைமையிலான உயரதிகாரிகள அடங்கிய குழுவொன்று இன்று புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளது.

றோலன்ட் ஸ்ரியூரிர் தலைமையில் ஆசிய பசுபிக் இலத்தீன் அமெரிக்கப் பணிப்பாளர் நாயகம் குயின்ரர் ட்ரில்றியூஸ், உதவிப் பணிப்பாளர் நாயகம் ஜனா ஹரீன் அம்மையார், சிரேஷ்ட ஆலோசகர் வோல்ஹங் ஹறற்வா மற்றும் உணவுப் பாதுகாப்பு அவசரகால சேவையின் அகதிகள் நடவடிக்கைகளுக்குமான அமைச்சின் பொருளாதார கூட்டமைப்பிற்கும் அபிவிருத்திக்குமான உதவித் தலைவர் றேடர் ஹோசிர் அம்மையார் ஆகியோரே இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

யாழ். கடற்றொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் வேலணையில் அமைக்கப்பட்டுள்ள மீன்களைப் பாதுகாத்தலுக்கும், சந்தைப்படுத்தலுக்குமான நிலையத்தைத் திறந்துவைப்பதற்காகவே மேற்படி குழுவினர் இங்கு வருகைதரவுள்ளனர்.

வேலணையில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி நிலையம் இன்று முற்பகல் 11.55 மணிக்கு றோலன்ட் ஸ்ரியூரியால் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினர்களாக யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர், ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் மற்றும் கடற்றொழில் திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தின் குருநகர் மற்றும் பருத்தித்துறை திக்கம் ஆகியவற்றிலும் மீன்களைப் பாதுகாத்தலுக்கும், சந்தைப்படுத்தலுக்குமான இரு நிலையங்கள் அமைக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-05)

# ஜாதிக ஹெல உறுமயவுக்குள் முரண்பாடுகள் வலுக்கின்றன

ஜாதிக ஹெல உறுமயக் கட்சிக்குள் பௌத்த பிக்குகள் அல்லாத உறுப்பினர்களது பங்கு தொடர்பான சர்ச்சையினால் அக்கட்சியின் பிரதான உறுப்பினர்களிடையே விரிசல் அதிகரித்து வருகிறது.

இவ்விடயம் தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்களான உடுவே தம்மாலோக தேரர் மற்றும் அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோருக்கிடையில் கருத்து முரண்பாடுகள் அதிகரித்துவருகின்றன.

சிஹல உறுமயவின் உறுப்பினர்களைக் கட்சியில் இருந்து விலக்கி கட்சியின் அதிகாரங்களும் பௌத்த மதகுருமாருக்கே வழங்கவேண்டும் என உடுவே தம்மாலோக தேரர் கூறிவருகின்றார்.

ஆயினும் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியைக் கட்டியெழுப்புவதில் சிஹல உறுமயக் கட்சியின் உறுப்பினர்களின் பங்களிப்பு அதிகம் இருந்ததைச் சுட்டிக்காட்டியுள்ள அத்துரலிய ரத்ன தேரர், அவர்களுக்கும் கட்சியின் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டுமென வாதிட்டுவருகின்றார்.

இதேவேளை கட்சிக்குள் எழுந்த இந்த முரண்பாடுகளை அடுத்து கடந்த புதன்கிழமை ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடாத்திய உடுவே தம்மாலோக தேரர் எதிர்வரும் நான்காம் திகதிக்கு முன்னர் தன்னுடைய கோரிக்கைகள் தொடர்பாக உரிய பதில் கிடைக்காவிட்டால் ஜாதிக ஹெல உறுமயக் கட்சிக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கவிருப்பதாக எச்சரித்துள்ளார்.

இச் செய்தியாளர் மாநாட்டை நடத்துவதால் நிலைமை மேலும் சிக்கலாகிவிடும் என்று தெரிவித்து, அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அத்துரலிய ரத்ன தேரர் மேற்கொண்ட முயற்சிகள் கைகூடவில்லை.

இது இவ்வாறிருக்க கொலன்னாவ ஸ்ரீசுமங்கல தேரர் போன்று தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தான் துறக்கப்போவதில்லை என்று தெரிவித்திருக்கும் உடுவே தம்மாலோக தேரர், பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தாம் துறந்துவிட்டால் சிஹல உறுமயக் கட்சியுடன் ஒத்துபோகக்கூடிய ஒவருக்கு அப்பதவி வழங்கப்பட்டுவிடும் என்று தான் கருதுவதாகவும் தெரிவித்தார்.

ஜாதிகஹெல உறுமயக் கட்சிக்குள் தோன்றியிருக்கும் இம்முரண்பாடுகளைப் பயன்படுத்தி அக்கட்சியின் ஆதரவினை தமக்கு சாதகமாகப் பெறும் முயற்சியில் ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் மேற்கொண்டு வருகின்றன.

இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி உடுவே தம்மாலோக தேரரை தம்பக்கம் இழுக்கவோ அல்லது அவரது ஆதரவை தமது அரசாங்கத்துக்குப் பெறுவதற்கோ ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினர் முயற்சிகளை எடுத்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ற-121)

### க.கா.குழுவின்...

அடிப்படையில். நாம் இதனை உறுதிப்படுத்தியுள்ளோம். ஆனால புலிகளின் முகாம்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை பாதுகாப்பமைச்சிடம் கையளித்ததன் பின்னர் கருத்துதெரிவித்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒஸ்கார் சொல்னெஸ், திருகோணமலையை சூழ புலிகளின் எத்தகைய முகாம்களையோ, இராணுவக் கட்டடங்களையோ நாங்கள் காணமுடியவில்லை, தாம் விஜயம்செய்த புலிகளின் அனைத்து முகாம்களும் அவர்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன என்று கூறுகின்றார்.

ஆனால் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட சமயம் இவ்வாறான எல்லை எதுவும் இருந்தது இல்லை. இவ்வாறான பிரதேசங்கள் அரசுக்கோ அல்லது புலிகளுக்கோ நிரந்தரமானது அல்ல. எனவே இவ்விடயம் தொடர்பில் கண்காணிப்புக்குழு உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (த-6)

### காயமடைந்த...

படுகாயமடைந்த இவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் என்றும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்தார் என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (க)

### சர்வஜன...

அத்தகைய முயற்சிகளைத் தடுக்க ஐக்கிய தேசியக் கட்சி இடமளிக்காது. ஆனால், அதனைத் தோற்கடிக்கும் முயற்சியிலேயே கட்சி ஈடுபடும்.

ஜப்பானின் விசேட சமாதான தூதுவர் யசூசி அகாசியின் பயணம் குறித்து ஜீ.எல்.பீரிஸ் கருத்து தெரிவிக்கையில், டோக்கியோ மற்றும் ஒஸ்லோப் பிரகடனங்களின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமானால் ஐக்கிய தேசியக் கட்சி அதற்குப் பூரண ஆதரவினை வழங்கும். விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்குமானால் ஐக்கிய தேசியக் கட்சி சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்குமான ஆலோசனை சபையில் மறுப்பெதனையும் தெரிவிக்காமல் பங்குபற்றும் எனவும் தெரிவித்தார். (த-121)

